மலர்-2 இதழ்-32 டிசம்பர் 16-31 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



# தேவர்களுக்கு பிரம்ம முகூர்த்தமான மார்கழி மாதம்

# சாஸ்திர சம்பிரதாய கருத்துக்கள்

## இக்காலத்திற்கு உதவும்

- கல்வி கற்கும் மாணவன் இந்த எட்டு விஷயங்களில் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும். அவை காமம், கோவம், பேராசை, இனிப்பு உணவுகள், அலங்காரம், அதிக ஆர்வம், அதிக தூக்கம், உடலை பராமரிக்க அதிக அக்கறை.
- உங்கள் தேவைக்கு அதிகமான செல்வங்களை, தானம் இடுங்கள், இன்று வரை நாம் கர்ணன், பலி சக்ரவர்த்தி, விக்ரமாதித்தனை பாராட்டுகிறோம்.
- தேனீக்களை பாத்து கற்று கொள்ளுங்கள், அது கஷ்டப்பட்டு தேடிய தேனை அது உன்பதில்லை, யாரோ ஒருவன் ஒரு நாள் அவற்றை அழித்து தேனை தூக்கி செல்கிறான். அது போல் நாம் பார்த்து பார்த்து சேர்த்த செல்வம் கொள்ளை போகும் முன் உங்களால் முடிந்த தானங்களை செய்யுங்கள்.!
- ஏமாற்றும் மனைவி, போலியான நண்பன், சோம்பேறியான வேலைக்காரன் ஆகியவர்களுடன் வாழ்வது ஒரு கொடிய விஷப் பாம்புடன் வாழ்வதை போன்றது, இது நிச்சயம் மரணத்தை தரும்.
- ஒருவன் தன்னுடைய கஷ்ட காலத்திருக்கு தேவையான பணத்தை முன்பே காக்க வேண்டும்.
- வேலைக்காரனை வேலை செய்யும் போதும், உறவினர்களை கஷ்டம் வரும் போதும், நண்பனை ஆபத்து நேரும் போதும், மனைவியை நோய் வாய்ப்படும் போதும், தூரதிஷ்டமான காலத்திலும் அறியலாம்.
- கூறிய நகங்கள் அல்லது கொம்புகள் உடைய மிருகம், ஆயுதம் ஏந்திய மனிதன், அரச குடும்பத்தில் பிறந்தவர்களை ஒரு நாளும் நம்ப கூடாது.
- ஒரு காரியம் நிறைவேறும் வரை அவற்றை பற்றி அறிவாளி வெளியில் சொல்லமாட்டான்.
- அறிவுள்ளவன் தன் குழந்தைகளுக்கு சகல வித்தைகள் பயிலும் வாய்ப்பை தேடித் தருவான்.
- ஒரு நாளும் ஒன்றையும் படிக்காமலும், ஒரு வரியாவது, ஒரு சொல்லையாவது கற்காமலும், நல்ல காரியங்களில் ஈடுபடாமலும் செல்ல வேண்டாம்.
- நல்ல குடும்பத்தில் பிறந்தாலும், நல்ல வசதிகள் இருந்தாலும் கல்வி கற்காவிடின் ஒருவன் வாசனையற்ற மலரை போன்றவன் ஆவான்.
- உங்கள் குழந்தையை 5 வயது வரை கொஞ்சுங்கள், 5 15 வயது வரை தவறு செய்தல் தடியால் கண்டியுங்கள். 15 வயதுக்கு மேல் நண்பனாக நடத்துங்கள்.
- கற்பது பசுவை போன்றது, அது எல்லா காலங்களிலும் பால் சுரக்கும், அது தாயை போன்றது எங்கு சென்றாலும் நம்மை காக்கும், ஆதலால் கற்காமல் ஒரு நாளும் வீணாக செல்ல வேண்டாம்.
- கடலில் பெய்யும் மழை பயனற்றது, பகலில் எரியும் தீபம் பயனற்றது, வசதி உள்ளவனுக்கு கொடுக்கும் பரிசு பயனற்றது, நோய் உள்ளவனுக்கு கொடுக்கும் அறுசுவை உணவு பயனற்றது. அதுபோல் முட்டாளுக்கு கூறும் அறிவுரையும் பயனற்றது.
- காமத்தை விட கொடிய நோய் இல்லை. அறியாமையை விட கொடிய எதிரி இல்லை. கோவத்தை விட கொடிய நெருப்பு இல்லை,எவன் ஒருவனுக்கு செல்வம் இருக்கிறதோ, அவனுக்கு உறவினர்கள் உண்டு, நண்பர்கள் உண்டு. பணம் இருப்பவனைத் தான் உலகம் மனிதனாக மதிக் கிறது. அவனைத்தான் அறிவாளி, பண்டிதன் என்று உலகம் போற்றுகிறது.
- பிறவி குருடனுக்கு கண் தெரிவதில்லை, அது போல் காமம் உள்ளவனுக்கு கண் தெரியாது, பெருமை உள்ளவனுக்கு கெடுதி தெரியாது, பணம் செய்யவேண்டும் என்ற எண்ணம் உள்ளவனுக்கு பாவம் தெரியாது.
- பேராசை கொண்டவனை பரிசு கொடுத்தும், பிடிவாதம் உள்ளவனை சலாம் போடுவதன் மூலமும், முட்டாளை நகைச்சுவை மூலமும், அறிவாளியை உண்மையான வார்த்தை மூலமும் அணுகலாம்.
- சிங்கத்திடம் இருந்து ஒன்றையும், கொக்கிடம் இருந்து இரண்டையும், கழுதையிடம் இருந்து மூன்றையும், கோழியிடம் இருந்து நான்கையும், காக்கையிடம் இருந்து ஐந்தையும், நாயிடம் இருந்து ஆறு விஷயங்களையும் நாம் கற்று கொள்ள வேண்டும்.
- சிங்கம் எந்த ஒரு விஷயத்தையும் உடனடியாக செய்யாது, நன்கு ஆலோசனை செய்த பின்பு முழு மனதுடன் உறுதியாக செயல்படும்.
- கொக்கு ஓடு மீன் ஓட உறு மீன் வரும் வரை காத்து நிற்கும், அதுபோல் அறிவாளி ஒரு காரியத்தை செய்வதற்கு முன் காலம், இடம், தன் ஆற்றல் கூடும் வரை காத்திருந்து செய்வான்.
- களைப்புற்றாலும் கழுதை தன் வேலையை தொடர்ந்து செய்யும், வெயில், மழை என்று பாராமல் உழைக்கும், தன் முதலாளிக்கு கட்டு பட்டிருக்கும். ஆகிய மூன்றும் கழுதையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷ யங்கள் ஆகும்.
- விடியற்காலை எழுதல், தைரியமாக சண்டையிடுதல், அவர் அவர்க்கு தேவையானவற்றை பிரித்து கொடுத்தல், தனக்கு தேவையானவற்றை தானே உழைத்துத் தேடி சம்பாதித்தல் ஆகிய நான்கும் சேவலிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.
- இரவில் மனைவியுடன் சேர்ந்து இருத்தல், தேவையான பொருள்களை சேமித்து வைத்தல், யாரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், தைரியம், எச்சரிக்கை உணர்வு ஆகிய ஐந்தும் காக்கையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.
- கிடைப்பதை உண்டு திருப்தி அடைதல், உணவு கிடைக்காத நேரத்தில் பட்டினி இருத் தல், நன்றாக பசி இருந்தும் கட்டளை வரும் வரை காத்து இருத்தல், நல்ல தூக்கத்தில் இருந்தாலும் உடனடியாக எழுந்து செயல் படுதல், முதலாளிக்கு விசுவாசமாக இருத்தல், உருவத்தில் பெரிய மிருகமாக இருந்தாலும் தைரியமாக எதிர்த்தல் ஆகிய ஆறு குணங்களை நாயிடம் இருந்து கற்று கொள்ள வேண்டும்.
- அறிவாளி தனக்கு ஏற்படும் அவமானங்களையும், தன் மன விரக்தியையும், தன் மனைவியின் தீய நடத்தையும், பிறரால் ஏற்படும் கடும் சொற்களையும் வெளியில் சொல்லமாட்டான்.



- ஒருவன் தனக்கு கிடைக்கும் மனைவி, உணவு, நியாமான முறையில் வரும் வருமானம் ஆகியவற்றில் திருப்தி அடைய வேண்டும். ஆனால் கற்கும் கல்வி, தர்ம காரியங்கள் ஆகியவற்றில் திருப்தி அடையாமல் தொடர்ந்து செய்ய வேண்டும்.
- யானையிடம் இருந்து 1000 அடி விலகி இருங்கள், குதிரையிடம் இருந்து 100 அடி விலகி இருங்கள், கொம்பு உள்ள மிருகத்திடம் இருந்து 10 அடி விலகி இருங்கள். ஆனால் உங்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்யும், ஏமாற்றும் மக்கள் வசிக்கும் ஊரை விட்டு சென்று விடுங்கள்.
- எல்லாம் காரியங்களிலும் உங்கள் கொள்கைகளில் பிடிவாதமாக இருக்காதீர். வளைந்து நெளிந்து வாழ கற்று கொள்ளுங்கள். காடுகளில் நீண்டு நேராக உள்ள மரங்களே முதலில் வெட்டப்படுகிறது.
- அன்னம் நீர் உள்ள இடத்தில் தான் வசிக்கும், நீர் இல்லாது போனால் வேறு இடத்திருக்கு சென்று விடும். அது போல் மனிதர்கள் ஆதாயம் உள்ளவரை தான் நம்மிடம் பழகுவார்கள். இதை புரிந்து கொள்ளுங்கள்.
- சிங்கத்தில் குகைக்குள் சென்றால் உங்களுக்கு மான் கொம்புகளோ, யானைத் தந்தங்களோ கிடைக்கலாம், நரியின் குகைக்குள் சென்றால் மாட்டின் வாலோ, துண்டு எலும்புகளோ தான் கிடைக்கும். ஆதலால் ஒரு காரியத்தை தொடங்கும் முன் நமக்கு என்ன கிடைக்கும் என்று ஆலோசித்து அதில் இறங்க வேண்டும்.
- அறியாமை ஒரு மனிதனை வீணாக்கும். பயிற்சி செய்யாவிடின் நாம் கற்ற வித்தைகள் வீணாகும்.
- வயதான காலத்தில் மனைவியை இழப்பது, உறவினர்களை நம்பி பணத்தை இழப்பது, உணவுக்காக அடுத்தவரை நாடி இருப்பது ஆகிய மூன்றும் மிகவும் துரதிஷ்டமான சம்பவங்கள் ஆகும்.
- அழகு ஒழுக்கம் இல்லாத செயல்களால் கெட்டு போகும், நல்ல குலத்தில் பிறந்தவனுடைய மரியாதை கெட்ட நண்பர்களால் கெட்டு போகும். முறையாக கற்காத கல்வி கெட்டு போகும். சரியாக பயன் படுத்தாத பணம் கெட்டு போகும்.
- கல்வி கற்றவனை மக்கள் மரியாதை செய் கின்றனர். கல்வி கற்றவன் கட்டளைக்கு அனைவரும் மரியாதை செய்கின்றனர். கல்வி சென்ற இடமெல்லாம் சிறப்பை தேடித் தருகிறது. ஆதலால் கல்வி கற்பதை ஒரு நாளும் நிறுத்த வேண்டாம்.
- எருக்கம் பூ அழகாக இருந்தாலும் அது சிறப்பான வாசனை தராது. அதுபோல் நல்ல குலத்தில் பிறந்தாலும், அழகாக இருந்தாலும் ஒருவன் கல்வி கற்காவிடின் வீணான மனிதன் ஆவான்.
- மாணவன், வேலைக்காரன், பயணம் செய்பவர்கள், பயத்தில் உள்ளவன், கருவூலம் காக்கும் காவல்காரன், மெய் காவலர்கள், வீட்டை காவல் காக்கும் நாய் ஆகிய ஏழு நபர்களும் அயர்ந்து தூங்கக்கூடாது, தேவை ஏற்பட்டால் உறக்கத்தில் இருந்து உடனடியாக எழுந்து செயல்பட வேண்டும்.
- பாம்பு, அரசன், புலி, கெட்டும் தேனீ, சிறு குழந்தை, அடுத்த வீட்டுக்காரனின் நாய், முட்டாள் ஆகிய ஏழு நபர்களை தூங்கும் போது எழுப்பக்கூடாது.
- பணம் ஒன்றே ஒருவனை செல்வந்தன் ஆக்காது, பணம் இல்லை என்றாலும் கல்வி கற்றவன் செல்வந்தன் ஆகிறான், ஒருவன் கல்வி கற்காவிடின் அனைத்தும் இழந்தவனாகிறான்.
- கஞ்சனுக்கு பிச்சைகாரன் எதிரி ஆவான், தவறு செய்யும் மனைவிக்கு கணவன் எதிரி ஆவான். அறிவுரை கூறும் பெரியவர்கள் முட்டாளுக்கு எதிரி ஆவார், பூரண நிலவு ஒளி திருடர்களுக்கு எதிரி ஆகும்.
- கல்வி கற்க விரும்பாதவன், நல்ல குணங்கள் இல்லாதவன், அறிவை நாடாதவன் ஆகியவர்கள் இந்த பூமியில் வாழும் அற்ப மனிதர்கள், அவர்கள் பூமிக்கு பாரம்.
- வறுமை வந்த காலத்தில் உறவினர்களின் தயவில் வாழ்வதை விட புலிகள் வாழும் காட்டில், புற்கள் நடுவில் உள்ள மரத்தடியில் வாழ்வது மிகவும் மேலானது.
- பல பறவைகள் இரவில் ஒரே மரத்தில் இருந்தாலும் காலையில் ஒவ்வொன்றும் ஒரு திசையில் பறக்கிறது. ஆதலால் நம்மிடம் நெருங்கி உள்ளளோர் எப்போதும் நம்முடன் இருப்பதில்லை, இதை உணர்ந்து கவலைப்படாமல் வாழ வேண்டும்.
- பெரிய யானை சிறிய அங்குசத்தை கண்டு பயப்படுகிறது, சிறிய மெழுகுவத்தி பெரிய இருளை விலக்குகிறது, பெரிய மலை சிறிய உலியால் வெட்டி எடுக்கப்படுகிறது. பெரிய உருவத்தினால் என்ன பயன்? உருவத்தை கொண்டு ஒருவரை எடை போடக்கூடாது.
- வேப்ப மரத்தை கிளை முதல் வேர் வரை நெய்யும், பாலும் ஊற்றி வளர்தாலும் அதன் கசப்பு தன்மை மாறாது. அது போல் கெட்ட மனிதர்களுக்கு எத்தனை விதமாக உரைத்தாலும் அறிவு வராது.









# செந்தூரத்தின் மகிமையும் ஆஞ்சநேயரின் பக்தியும்

ஆஞ்சநேயர் இருக்கும் ஆலயங்களில் பெரும்பாலும் பிரசாதமாக செந்தூரத்தை வழங்குவார்கள். மேலும் ஆஞ்சநேயர் உடல் முழுவதும் செந்தூரத்தை பூசி ஆராதிப்பதை பார்த்திருக்கிறோம். இதற்கு சுவாரஸ்யமான ஒரு காரணம் உண்டு.

ராமராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், அரசவையில் கலந்து கொள்ள சீதா தேவி தயாராகிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு வெள்ளிச் சிமிழிலிருந்து சிறிது செந்தூரத்தை எடுத்து தன் நெற்றி வகிட்டில் இட்டுக் கொண்டார்.

சீதாதேவியை அரசவைக்கு அழைத்துச் செல்ல ராமனின் சேவகனான அனுமன் இதை கவனித்தார்.

“தாயே உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?” என்று கேட்டார்.

சீதா தேவியும் “தாராளமாக கேள்” என்றார்..

“நீங்கள் ஏன் தினசரி உங்கள் வகிட்டிலும் சிந்தூரை வைத்துக் கொள்கிறீர்கள்” என்றார். .

“என் கணவர் நீடூழி வாழ வேண்டும் என்பதற்காக” என்றார்.. சீதா தேவி.

பிறகு அனுமன் சீதா தேவியை அரசவை வாயில் வரை சென்று விட்டு விட்டு..

“தாயே நீங்கள் செல்லுங்கள் நான் இதோ வந்து விடுகிறேன்” என்று கூறிவிட்டு சென்று விட்டார்.

சீதை தன் பணிப்பெண்களுடன் வருவதை கண்ட ராமன்.. “அனுமன் எங்கே?” என்று கேட்க..

“சற்று நேரத்தில் வந்துவிடுவதாக கூறி அவசரமாக சென்றார்” என்று சீதை கூறினார்.

சில நிமிடங்களில் தன் உடல் முழுவதும் செந்தூரைப் பூசிக் கொண்டு அரசவைக்கு வந்தார் அனுமன்..

“அனுமா.. இது என்ன கோலம்?” என்று ராமன் கேட்க..

“அன்னை நெற்றி வகிட்டில் வைத்துக் கொள்ளும் சிறு செந்தூரம் தங்களின் நீண்ட ஆயுளுக்கு வழி வகுக்கும் என்றால்... நான் தங்களின் பரிபூரண ஆயுளுக்காக என் உடல் முழுவதும் செந்தூரத்தை தினமும் பூசிக் கொள்வேன்” என்றார்....

இதைக் கேட்ட ராமனின் கண்கள் அனுமனின் பக்தியையும் வெகுளித்தனத்தையும் நினைத்து கலங்கியது. அனுமனை கட்டித் தழுவிக் கொண்டார்.

கடவுளான ராமபிரான் மீது அனுமனின் பக்தியை வெளிப்படுத்தி காட்டவே அனுமன் சன்னதிகளில் செந்தூரத்தை பிரசாதமாகவும், அனுமன் உடல் முழுவதும் செந்தூரத்தை பூசியும் வழிபடுகின்றனர்.



# 5-இன் அற்புதம்

**1. பஞ்ச கன்னியர்**
அகலிகை, சீதை, தாரை, திரௌபதி, மண்டோதரி.

**2. பஞ்சவாசம்**
இலவங்கம், ஏலம், கற்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

**3. பஞ்சாமிர்தம்**
சர்க்கரை, தயிர், தேன், நெய், பால்.

**4. பஞ்சபாண்டவர்**
தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன்.

**5. பஞ்சசீலம்**
கொல்லாமை, பொய்யாமை, கல்லாமை, காமமின்மை, இரவாமை.

**6. பஞ்சதிராவிடர்**
தெலுங்கர், திராவிடர், கன்னடர், மகாராஷ்டிரர், கூர்ஜரர்.

**7. பஞ்சபட்சி**
வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்.

**8. பஞ்சபுராணம்**
தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்.

**9. பஞ்சரத்தினம்**
வைரம், முத்து, மாணிக்கம், நீலம், மரகதம்.

**10. பஞ்சவர்ணம்**
வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

**11. பஞ்சாங்கம்**
கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம்.

**12. பஞ்சமூலம்**
செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேரரத்தை, சுக்கு.

**13. பஞ்சபாதகம்**
பொய், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை, கொலை.

**14. பஞ்சபாணம்**
முல்லை, அசோகு, வனசம், சூதம், நீலம்.

**15. பஞ்சாயுதம்**
சங்கு, சக்கரம், கதை, கத்தி, வில்.

**16. பஞ்சபரமோட்டி**
அருகர்,சித்தர்,உபாத்தியாயர்,ஆசிரியர்,சாதுக்கள்.

**17. பஞ்சசிகை**
தலை, உச்சி, கண், புருவம், முழங்கை.

**18. பஞ்சதேவர்**
பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன்.

**19. பஞ்சஸ்தலம்**
காசி, சோமநாத், பூரி, ராமேஸ்வரம், வைத்தியநாத்.

**20. பஞ்ச பூதங்கள்**
நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம்.





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

## ஆன்மிகமலர் டிரஸ்ட்

**Tamilnadu Government Redg.304/2016**

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033

# தீர்க சுமங்கலிபவா...!

## பெரியோர் ஆசியின் அற்புத விளக்கம்

திருமணத்தின்போது தம்பதியர்களை 'தீர்க சுமங்கலி பவா...!' என்று நமது முன்னோர் ஆசி வழங்குவார்கள். ஆனால் அந்த ஆசிக்கு என்ன அர்த்தம் என்பது சரியாக தெரியாமலேயே பலர் ஆசி பெறுவதுண்டு.

உண்மையில் தீர்க்க சுமங்கலிபவா என்பதன் விளக்கம் 'மனைவி கணவனிடம் 5 மாங்கல்யம் பெற வேண்டும்' என்று அர்த்தம்.

அந்த ஐந்து வகையான மாங்கல்யங்கள்

1. திருமணத்தில் ஒன்று,
2. 60 வயது ஷஷ்டியப்த பூர்த்தியில் ஒன்று,
3. 70 வயது பீமரத சாந்தியில் ஒன்று,
4. 80 வயது சதாபிஷேகத்தில் ஒன்று,
5. 96 வயது கனகாபிஷேகத்தில் ஒன்று!.

இவைகள்பற்றிஒருசிறுவிளக்கம்;

ஷஷ்டியப்த பூர்த்தி, பீம ரத சாந்தி, சதாபிஷேகம், கனகாபிஷேகம் போன்ற சடங்குகளை நடத்திக் கொள்வது என்பது எல்லோருக்கும் வாய்த்து விடுவதில்லை.

பெரும் பாக்கியமும் பூர்வ புண்ணியமும் செய்தவர்களுக்கே இந்த மணவிழா காணும் பாக்கியம் அமைகிறது. இது போன்ற வைபவங்கள் பொதுவாக ஆயுள் விருத்தியைப் பிரதானமாகக் கொண்டே அமைகின்றன.

சகல தேவர்களையும் மகிழ்விக்கும் பொருட்டு அன்றைக்கே வேத பாராயணங்களும், ஹோமங் களும் நடைபெறுகின்றன.

உறவு முறைகள் கூடி நின்று குதூகலப்படும் போது, ஷஷ்டியப்த பூர்த்தி தம்பதியரின் மனம் மகிழும். நமக்கென்று இத்தனை சொந்தங்களா என்கிற சந்தோஷம் அவர்களின் மனதில் பரவ சத்தை ஏற்படுத்தும்.

பூமி 360 பாகைகளாகவும் அந்த 360 பாகை களும் 12 ராசி வீடுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த 360 பாகைகளையும் கடந்துசென்று ஒரு வட்டப் பாதையை பூர்த்தி செய்வதற்கு

- சூரியனுக்கு ஓர் ஆண்டும்,
- செவ்வாய்க்கு ஒன்றரை ஆண்டும்,
- சந்திரனுக்கு ஒரு மாதமும்,
- புதனுக்கு ஒரு வருடமும்,
- வியாழனுக்கு 12 வருடங்களும்,
- வெள்ளிக்கு ஒரு வருடமும்,
- சனி பகவானுக்கு 30 வருடங்களும்,
- ராகுவுக்கு ஒன்றரை வருடங்களும்,
- கேதுவுக்கு ஒன்றரை வருடங்களும்,

ஆகின்றன.

இந்த சுழற்சியின் அடிப்படையில் ஒருவர் ஜனித்து, அறுபது வருடங்கள் நிறைவடைந்த தினத்துக்கு அடுத்த தினம், அவர் பிறந்த நாளன்று இருந்த கிரக அமைப்புகளும் வருடம், மாதம் போன்றவையும் மாறாமல் அப்படியே அமைந்திருக்கும்.

மிகவும் புனித தினமான அன்றுதான், சம்பந்தபட்டவருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் மிகவும் ஆச்சாரமான முறையில் தெய்வாம்சத்துடன் நிகழ வேண்டும்.

ஷஷ்டியப்த பூர்த்தி தினத்தன்று வேத பண்டிதர்களின் முன்னிலையில், 84 கலசங்களில் தூய நீரை நிரப்பி மந்திரங்களை உச்சரித்து ஹோமங்கள் செய்ய வேண்டும்.

அங்கே உச்சரிக்கப்படும் வேத மந்திரங்களின் சத்தம் மூலம் கலசத்தில் உள்ள நீர் தெய்வீக சக்தி பெற்று, புனிதம் அடைகிறது.

பின்னர், அந்தக் கலசங்களில் உள்ள நீரைக் கொண்டு ஷஷ்டியப்த பூர்த்தி தம்பதியினருக்கு அபிஷேகம் நடைபெறும்.

அபிஷேகத்துக்குப் பயன்படும் இந்த 84 கலசங்கள் எதைக் குறிக்கின்றன?

தமிழ் வருடங்கள் மொத்தம் அறுபது என்பதை நாம் அறிவோம்.

இந்த அறுபது ஆண்டுகளுக்கான தேவ தைகளையும், இந்த தேவதைகளின் அதிபதி களாகிய...

- அக்னி,
- சூரியன்,
- சந்திரன்,
- வாயு,
- வருணன்,
- அஷ்ட திக் பாலகர்கள் பாலாம்பிகை,
- அமிர்த கடேஸ்வரர்,
- நவநாயகர்கள்..

சேர்த்து குறிப்பதற்காகத்தான் 84 கலசங்கள் என்பது ஐதீகம்.

- பிரபவ முதல் விஷு வரையான 15 ஆண்டு களுக்கு அக்னி பகவானும்,
- சித்ரபானு முதல் துன்முகி வரையுள்ள 15 ஆண்டுகளுக்கு சூரிய பகவானும்,
- ஹேவிளம்பி முதல் விரோதிகிருது வரையுள்ள 15 ஆண்டுகளுக்கு சந்திர பகவானும்,
- பரிதாபி முதல் அட்சய வரையுள்ள 15 ஆண்டுகளுக்கு வாயு பகவானும் அதி பதிகள் ஆவார்கள்.

தன்னுடைய 60வது வயதில் ஐம்புலன்களால் வரும் ஆசையை வென்ற மனிதன் 60 வயதில் இருந்துதான், தனது என்ற பற்றையும் துறக்க முயல வேண்டும்.

தன்னுடைய மகன், மகள், சொந்த பந்தம் என்ற கண்ணோட்டம் மறைந்து உற்றார் உறவினர் அனைவரும் தன் மக்களே. எல்லோரும் ஒரு குலமே என்கிற எண்ணம் 70 வயது நிறைவில் பூர்த்தி ஆக வேண்டும்.

தான், தனது என்ற நிலை மறந்து அனைவரையும் ஒன்றாகக் காணும் நிலை பெற்றவர்களே 70வது நிறைவில் பீஷ்ம ரத சாந்தியைக் கொண்டாடும் தகுதியைப் பெறுகிறார்கள்.

காமத்தை முற்றிலும் துறந்த நிலையே பீஷ்ம ரத சாந்திக்கான அடிப்படை தகுதியாகும்.

70வது வயதில் இருந்து ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சுற்றி உள்ள எல்லா உயிர்களிலும் இறைவனைக் காண முயல வேண்டும்.

ஒவ்வொரு உயிரிலும் உறையும் இறைவனுடன் உரையாடப் பழகிக் கொள்ள வேண்டும். அவ னுக்கு ஜாதி, மதம், இன பேதம் எதுவும் இல்லை.

இப்படி அனைத்திலும் இறைவனை, அனைத் தையும் இறைவனாகக் காணும் நிலையை ஒரு மனிதன் 80 வயதில் பெறும் போதுதான் சதாபிஷேகம் (ஸஹஸ்ர சந்திர தர்ஸன சாந்தி ஆயிரம் பிறை கண்டவன்) காணும் தகுதியை அவன் அடைகிறாா். அப்போது சதாபிஷேகம் செய்துகொள்ள வேண்டும்.

இறையோடு இரண்டறக் கலந்து இறை சிந்தனை கொண்ட தம்பதிகளுக்கு 96 வயதில் கனகாபிஷேகம் செய்து இந்த ஜென்மாவின் ஐந்தாவது மாங்கல்யம் பூட்டி தீர்க்க சுமங்கலி பவா ஆசிக்கு உரியதாக அமைகிறது.



www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# ஞானத்திற்கு மிகப்பெரிய தடை தற்பெருமை

"மனிதனின் தற்பெருமை ஞானத்திற்கு மிகப் பெரிய தடை என்ற என் திட நம்பிக்கையை என் வாழ்வின் அனுபவங்கள் வலுப்படுத்தியுள்ளன. அகந்தைபூர்வமான தற்பெருமை ஒழிய வேண்டும். இது, இறைவன்தான் ஒரே கர்த்தா, பிரபஞ்ச நாடகத்தின் இயக்குநர் என்று அவனை நாம் காண்பதைத் தடுக்கும் ஒரு திரையாகும். இந்தப் பிரபஞ்சத்திரை அரங்கத்தில் நீங்கள் வெவ்வேறு பாத்திரங்களில் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நாளை உங்களுக்கு என்ன பாத்திரம் தரப்படும் என்பதை நீங்கள் முன்கூட்டியே அறியாமல் போகலாம். நீங்கள் எதற்கும் தயாராக இருக்கவேண்டும். இத்தகையதுதான் வாழ்க்கையின் நியதி. ஆகவே வாழ்வின் அனுபவங்களைப்பற்றிய வேதனை ஏன்? ஒவ்வொரு நிகழ்வையும், வேறு யாரோ ஒருவர் அதை ஒரு திரைப்படத்தில் நடிப்பதாக நீங்கள் பார்ப்பீர்களானால் நீங்கள் வருத்தப்படமாட்டீர்கள்.

ஒவ்வொரு வருடமும் உங்களது 365 கதாபாத்திரங்களையும் ஓர் அகப்புன்னகையுடனும், எல்லாவற்றையும் நீங்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள் என்ற நினைவுடனும் நடியுங்கள், அப்பொழுது வாழ்வினால் நீங்கள் ஒருபோதும் மீண்டும் புண்படமாட்டீர்கள்."

"பல பிறவிகளின் ஊடாக நீங்கள் பல பாகங்களை நடித்துள்ளீர்கள், ஆனால் அவை அனைத்தும் உங்களை மகிழ்விப்பதற்காகவே தரப்பட்டன உங்களை பயமுறுத்துவதற்கு அல்ல. உங்களுடைய அழிவற்ற ஆத்மா தீண்டப்படமுடியாதது. வாழ்க்கையாகிய திரைப்படத்தில் நீங்கள் அழலாம், சிரிக்கலாம், அநேக பாகங்களை நடிக்கலாம். ஆனால் நான் 'பரம்பொருள்', என அகத்துள் எப்பொழுதும் கூறவேண்டும். அந்த அறிவை அனுபவபூர்வமாகப் பெறுவதிலிருந்து பெரும் ஆறுதல் ஏற்படுகின்றது. காட்டிற்கு ஓடிவிடுவதால் மட்டுமே, பூவுலக வாழ்வு உண்மை என்ற மாயையிலிருந்து விழித்தெழ நீங்கள் எதிர்பார்க்க முடியாது. உங்களுக்குத் தரப்பட்டுள்ள பாகத்தை இறுதிவரை நீங்கள் நடித்து முடித்தேயாக வேண்டும். பிரபஞ்ச திரைப்பட நடிப்பிற்கு ஒவ்வொரு மனிதனும் தனது பங்கை அளிக்கிறான். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால் உங்களுடைய பாகத்தை நீங்கள் கண்ணியம், நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியுடன் நடிக்கவேண்டும். நீங்கள் இறைவனில் விழிப்புறும்போது, அவனது பூவுலக நாடகத்தில் எண்ணற்ற பாகங்களை நடித்திருந்தாலும்கூட நீங்கள் மாற்றமடையவில்லை என்பதை உங்களுக்கு அவன் காட்டுவான்"



## பரம்பொருளை கண்டறிவது எப்படி?

பரமஹம்ஸர் அருளுகிறார்: "பரம்பொருளை கண்டறிவதற்காக பலவகையான உத்திகள் இருக்கின்றன. மௌனம் அவற்றில் ஒன்று. மௌனத்தை பயிற்சி செய்தல் என்பது வெளியிலிருந்து உங்களுடைய உணர்வு நிலைக்குள் கசிந்து பரவுவதற்கு முயலும் அனைத்து ஆசைகளையும் மௌனமாக்குதல் என்பதாகும். அதனால் நீங்கள் உங்கள் ஆன்மாவை உணர்வதற்காக, அகத்தே மேலும் ஆழ்ந்து செல்லமுடியும். மற்றொரு முயற்சி அல்லது உத்தியானது, பக்தி அல்லது இறைவனுடன் பரிசுத்தமாகவும் எளிமையாகவும் பேசுதல் ஆகும். "நீயே என்னை படைத்துள்ளாய். நான் படைக்கப்படவேண்டும் என விரும்பவில்லை. உன்னையே எனக்கு வெளிப்படுத்துவது உன்னுடைய பொறுப்பாகும்." ஒரு சிறிதுநேரம் அவனிடம் பேசிவிட்டு, பிறகு மறந்துவிடுவது, அவனுடைய மறுமொழியை ஒருபோதும் கொணராது. இறைவன் கிடைப்பதற்கரியவன். ஏனெனில் எல்லோரும் அவனை தீவிரமாக எடுத்துக்கொள்வதில்லை. பிரார்த்தனை உத்தி பொதுவாக பலனற்றதாக உள்ளது. ஆழமாகவும் தேவையான அளவு பக்திபூர்வமாகவும் இருப்பதில்லை. உண்மையிலேயே நீங்கள் உயர்உணர்வு நிலைக்குச் செல்லும்வரை திரும்பத்திரும்ப பிரார்த்தனை செய்துகொண்டிருக்கவேண்டும். எந்தப் பிரார்த்தனையில் உங்கள் உண்மையான ஆன்மாவே, இறைவனுக்கான ஆசையுடன் பற்றி எரிகிறதோ, அதுமட்டுமே பலனளிக்கக்கூடிய பிரார்த்தனை. நீங்கள் சிலசமயம் அம்மாதிரியான பிரார்த்தனை செய்திருக்கிறீர்கள். மிக அவசியமாக ஏதோ ஒன்று தேவையாக இருந்தபொழுதோ, அல்லது அவசரமாக பணம் தேவைப்பட்டபொழுதோ அப்பொழுது உங்களுடைய ஆசையினால் ஆகாயத்தையே எரித்திருக்கிறீர்கள். அவ்வாறாகத்தான் இறைவனுக்காகவும் நீங்கள் உணரவேண்டும். இரவும் பகலும் நீங்கள் அவனுடன் பேசுங்கள். அவன் பதில் அளிப்பான். நீங்கள் அதைக் காண்பீர்கள்."

24 பாகம்

## யோகம் இறைவனைக் கண்டறியும் விஞ்ஞானம்

குருதேவர் அருளுகிறார்:

"இறைவனைத் தொடர்புகொள்வதற்கான யோகமுறை மிகச்சிறந்தது. அது பலவகையான விஞ்ஞான ரீதியாக பலனளிக்கக்கூடிய தியான உத்திகளைக் கொண்டுள்ளது. இறைவன் எவ்வாறு துல்லியமான விதிமுறைகள் மூலம் அவனுடைய பிரபஞ்சத்தை அவன் இயக்குகிறானோ, அதேபோல் இறைவனை அணுகுவதற்கும் ஒரு துல்லியமான விதிமுறை இருக்கவேண்டும் என இந்திய மாமுனிவர்கள் ஆராய்ந்தனர். அவர்களுடைய பரிசோதனையின் வாயிலாக யோகத்தின் ஆன்மீக விதிமுறைகள் கண்டறியப்பட்டன. யோகவிஞ்ஞானம் இந்த தேசத்தில் ஆன்மீகத் தேடலின் மற்ற எந்த முறைகளையும்விட அதிகமாக உறுதியுடன் நிலைபெறும். சொற்பொழிவுகளை கேட்பதற்காக மட்டுமே மக்கள் தேவாலயங்களுக்குச் செல்கின்ற மொத்தப் போக்கும் விலகும். மேலும் தியானிப்பதற்கும் மக்கள் செல்கின்ற கல்விக்கூடங்களையும் அமைதியான இடங்களையும் நோக்கி அவர்கள் போக்கு இருக்கும்." "முடியாதது என்று எதுவுமில்லை, நீங்கள் அவ்வாறு எண்ணாதவரை. ஓர் அழியும் மனிதன் என்றமுறையில் நீங்கள் வரம்பிற்குட்பட்டிருக்கிறீர்கள். ஆனால் இறைவனது குழந்தை என்றமுறையில் நீங்கள் வரம்பெற்றவர். இறைவன்மீது உங்கள் கவனத்தைக் குவியுங்கள். எந்தத் திசையிலும் பயன்படுத்துவதற்கு நீங்கள் விரும்பும் அனைத்து சக்திகளையும் பெறுவீர்கள். அதனால் உங்களது லட்சியங்களையும் அடையலாம்.

"உங்களுக்கு ஒரு வீடு வேண்டும், ஆனால் மனமோ, "அட அப்பாவியே உன்னால் வீடு வாங்க முடியாது", எனக்கூறினால் உங்கள் மன உறுதியை மேலும் திடமாக்க வேண்டும். 'முடியாது' என்பது உங்கள் மனதிலிருந்து மறையும்பொழுது இறையருள் வருகிறது. வீடு சுவர்க்கத்திலிருந்து நேராக உங்களிடம் வந்து விழாது. நீங்கள் மன உறுதியை ஆக்கப்பூர்வமான செயல்களின்மூலம் இடைவிடாது செலுத்திக்கொண்டே இருக்கவேண்டும். நீங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் விடாப்பிடியாக முயன்றால் மன உறுதியின் நோக்கம் நிறைவேறித்தான் ஆகவேண்டும்."

"அழிவுறும் மனிதனின் மூளையானது" முடியாதவைகளால் நிறைந்துள்ளது. குறிப்பிட்ட குணாதிசயங்களும் பழக்கவழக்கங்களும் உள்ள ஒரு குடும்பத்தில் பிறந்திருப்பதால்

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

இவைகளின் தாக்கத்தால் அவன் சில காரியங்களை 'தான்' செய்ய முடியாது என்று நினைக்க நேருகிறது. அவனால் அதிகம் நடக்க முடியாது. அவனால் இதைச் சாப்பிட முடியாது. அவனால் அதைப் பொறுக்க முடியாது. அப்படிப்பட்ட' முடியாதவைகள்' சுட்டெரிக்கப்பட வேண்டும். நீங்கள் விரும்பும் எல்லாவற்றையும் சாதிக்கக்கூடிய சக்தி உங்களுக்குள்ளேயே இருக்கிறது. அந்த சக்தி மன உறுதியில் பொதிந்துள்ளது."

"வாழ்க்கை இருண்டிருக்கலாம், இன்னல்கள் வரலாம், சந்தர்ப்பங்கள் பயன்படுத்தப்படாமல் நழுவிப்போகலாம். ஆனால் உங்களுக்குள் ஒரு போதும் சொல்லிக்கொள்ளாதீர்கள்.' என் கதை முடிந்துவிட்டது. கடவுள் என்னை கைவிட்டு விட்டான்.'

அம்மாதிரியான மனிதனுக்கு யார்தான் எதுவும் செய்ய இயலும்?. உங்கள் குடும்பம் உங்களை கைவிடநேரலாம்; நல்ல திர்ஷ்டம் உங்களை கைவிடுவதுபோல் தென் படலாம்; மனிதன் மற்றும் இயற்கையின் அனைத்து சக்திகளும் உங்களுக்கு எதிராக அணிவகுக்கலாம்; ஆனால் உங்களுக்குள் உள்ள தெய்வீக தொடக்க முயற்சியின் குணத்தைக்கொண்டு உங்களுடைய சொந்த கடந்தகால தவறான செயல்பாடுகளினால் உருவாக்கப்பட்ட விதியின் ஒவ்வொரு ஆக்கிரமிப்பையும் நீங்கள் தோல்வியுறச் செய்து சுவர்க்கத்தினுள் வெற்றிகரமாக நடைபோட முடியும்."

### வாழ்க்கையின் நோக்கம்
### இறைவனைக் காண்பதே

பரமஹம்ஸர் அருளுகிறார்: "நான் இறைவனுக்காக மட்டும்தான் உழைக்கிறேன். பூவுலகத்தின் மாயை எனக்கு இல்லை. பரமாத்மாவின் உன்னதமான முக்கியத்துவத்தை நிரூபிப்பதற்காக நான் இங்கே இருக்கின்றேன். தோன்றி மறைகின்ற உலக லட்சியங்களின் மீதும் மனித பந்தபாசங்களின் மீதும் கவனத்தை செலுத்தாதீர்கள். இத்தகைய மூடப்பற்று இறைவனிடமிருந்து உங்களுடைய மனதையும் அகற்றிவிடுகின்றது. "எப்பொழுது ஒருவன் விஷயங்களில் கர்மத்தில் கருத்து வைக்காது அகந்தையினால் உண்டாகும் சங்கல்பங்களை விட்டொழிக்கின்றானோ, அப்பொழுதுதான் அவன் யோகத்தில் நிலைபெற்று யோக புருஷன் எனப்படுகிறான்." (பகவத் கீதைVI4)

பகவத்கீதை வாக்கியங்களைச் சுட்டிக்காட்டிக்கொண்டுள்ள குருதேவர் பரமஹம்ஸர் கூறுவது மிகவும் உண்மையானதும் உன்னத மானுதுமாகும். அவ்வாறான ஒருவன் எப்படியிருப்பான் என்பதற்கான ஒரு கதையை கூற விரும்புகிறேன்.

### ஆமையும் ஆசானே.

ஒரு வயதான மனிதர் கங்கைக் கரையில் வசித்து வந்தார். அவர் ஒரு குடிசை கட்டி யிருந்தார். குடிசையில் ஒரு திண்ணை இருந்தது. நீர் நிரம்பிய மண்பானை ஒன்றும் இருந்தது. அதில் ஓர் ஆமையை வளர்த்து வந்தார். பக்கத் துக்குடியிருப்பில் மதிய உணவு வாங்கச் செல்லும்பொழுது கொஞ்சம் கடலையும் வாங்கிவந்து விடுவார். அதை அவர் ஊற வைத்து ஆமைக்கு ஊட்டி வந்தார். ஒருநாள் ஒருவன், "நீங்கள் ஏன் இந்த அழுக்கு பிடித்த ஜீவனை வளர்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?. இதை கங்கையில் கொண்டுபோய் எறிந்து விடுங்கள்" என்றான். அந்த முதியவர் மிகவும் சினமுற்றார்.

"நீ என் குருவை அவமதித்துவிட்டாய். மெதுவான காலடி சப்தம் கேட்டாலும் யாராவது சாதாரணமாகத் தொட்டாலும் அவர் எப்படி தன் எல்லா அங்கங்களையும் உள்ளே இழுத்துப் பந்துபோல் சுருட்டிக்கொள்கிறார். நீங்கள் பார்க்கவிலைலையா?. எவ்வளவு வேண்டுமானாலும் அசையுங்கள் அவர் ஒரு காலைக்கூட அசைக்க மாட்டாரே என்றார். "இதனால் என்ன பயன்" என்றான் வந்தவன். "என்ன! என்ன பயனா?" மனிதனும் இதே விதமாகக் கவனத்துடன் இருக்க வேண்டும். பேராசையிலிருந்தும், மக்கட் கூட்டத்திலிருந்தும் விலகிக்கொண்டு கண்களை மூடி ராமநாமத்தை ஜபிக்க வேண்டும் என்று தெரியவில்லையா?" பகவத்கீதை அத்யாயம் 2 சுலோகம் 58ல் இந்தக் கருத்தை காணலாமே.

உண்மை யாதெனில் அந்த முதியவர் யாரைப் பார்த்தாலும் ஓடி குடிசைக்குள் நுழைந்துகொள்வார். மிகப்பலமாக ராமநாமத் தைச் சொல்ல ஆரம்பித்து விடுவார். யார் அழைத்தாலும் பேசமாட்டார். இன்று ஏனோ பேசிக்கொண்டிருந்தார்.

"எது எப்படியிருந்தாலும் இது மிக வும் அருவெறுக்கத் தக்க தாய் தென் படுகிறதே" என்றான் வந்தவன். "அதானலென்ன, தன்னுடைய பெரிய லாபத்திறகாக தாழ்ந்தவர்களிடத்திலும் அன்பு காட்டத்தான் வேண்டும்." என்றார் பெரியவர். அவ்வாறு கூறிவிட்டு ஆமையை கையிலெடுத்து கொஞ்ச ஆரம்பித்தார்.



## கடவுளை அடையும் முறைதான்...



பாலில் வெண்ணெய் இருக்கிறது என்று சொன்னால் போதாது. அதை எடுக்க முயற்சிக்க வேண்டும். அதேபோல வெறுமனே பகவத் விஷயங்களை பற்றி பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. இறைவனை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும். இறைவனிடம் பக்தி செலுத்த வேண்டும். பாலை உறை குத்தி தயிராக்கி கடைந்து பின்னர் வெண்ணெய் எடுப்பது போல முதலில் தியானம் முதலிய சாதனங்களால் இறைவனை அறிய முயற்சிக்க வேண்டும். பின்னரே பக்தி எனும் சாதனம் மூலமாக இறைவனை பற்றி அறிய முடியும். கடவுளை பற்றி கூறும் சாஸ்திரங்கள் பல இருக்கலாம். ஆனால் அவற்றை கொண்டு மட்டுமே கடவுளை அறிந்து கொள்ள முடியாது. கடவுளை அடைய உண்மையான பக்தியும் சத்சங்கமும் வேண்டும்.

பிறகு "தன்னுடைய உண்மையான சிறந்த நன்மையைக்கருதி மிகத்தாழ்ந்தவர் களிடத்திலும் அன்பைக்காட்டு" என்று பாட ஆரம்பித்தார். அதற்கான ஒரு குறள்கூட உள்ளது.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.
(திருக்குறள்126)

மேலே கூறப்பட்டுள்ள பொருள் குறித்து எனது கருத்தினைக்கூற விழைகின்றேன்.

ஒருவன் ஒரு பிறப்பில், ஆமை தன் ஐந்து உறுப்புக்களையும் ஒட்டினுள் அடக்கிக் கொள்வதைப்போல், பாவம் செய்யாமல் ஐம் பொறிகளையும் அடக்கி ஆளவல்லவனாயின் அது அவனுக்கு ஏழு பிறப்புகளுக்கும் காவலாய் உதவும்.

"ஐம்புலன்களையும் அடக்கி, மனதை அடக்கி இவ்வுலகிலிருந்து விலகி இருங்கள்" என்று குருதேவர் கூறுவது போல் அதை இந்த ஆமை கடைபிடிப்பது மனிதனுக்கு ஓர் உதாரணமாக இருக்கிறது. தன் முதுகிலுள்ள ஓடு மட்டும்தான் தன் உயிருக்குப் பாதுகாப்பு என்று ஆமை நினைக்கின்றது. அதனால் அதனருகில் யார் வந்தாலும் தன் பாதுகாப்பினைக்கருதி வைராக்கியத்துடன் தன் கைகால்களை ஓட்டினுள் அடக்கிக்கொள்கின்றது. ஆமை அவ்வாறிருப்பதைப்பார்க்கும்போது அது 'யோகநிலை'யில் இருப்பதாகத்தான் எண்ணத் தோன்றுகின்றது. ஏன் என்றால் அதை யாராலும் அசைக்க முடியாதவாறு, அது ஓட்டுக்குள் இருக்கிறது. எப்படி அசைத்தாலும் கைகால்கள் வெளியே நீட்டாது. அதே போன்று மனிதனானவனுக்குப் பலமான பாதுகாப்பு இறைவன் மட்டுமேயாகும். மனிதன் எப்பொழுதும் இறைவனை நினைத்துக்கொண்டும் அவனை அடைவதற்காக முயற்சி செய்துகொண்டும் யோகத்தால் திடசித்தனாக இருந்துகொண்டு இறைவனுடன் இருந்தவாறு இந்த உலகில் வாழ்ந்தால் அவன் உலக வியாபாரங்களிலிருந்து விடுபடுவான்; இறைவனையும் அடைவான். அவன் இறைவனை அடைவதற்கு முன்னரே இறைவனின் பாதுகாப்பைத் தேடிக்கொள்கிறான் எனப்பொருளாகிறது. ஆமைபோன்று மனிதன் வாழவேண்டும் என்று பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணன் அருளியதன் பொருள் இதுதான். ஆமைக்கு இருக்கும் வைராக்கியம் மனிதனுக்கும் இருக்க வேணடும்.

'ஜெய் குரு'

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909


www.aanmeegamalar.com

# சீத்தாப் பழத்தின் மகத்துவங்கள்

### முடி உதிர்தல், பேன், பொடுகு நீங்க

சீத்தாப் பழத்தின் விதைகளை பொடியாக்கி, பாசிப்பயிறு இவை இரண்டையும் சமஅளவு எடுத்து கலந்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் முடி மிருதுவாகும். முடி உதிராது. பேன்கள் ஒழிந்துவிடும். சீத்தாப் பழத்தின் விதைகளை பொடியாக்கி அதனுடன் சிறிதளவு வெந்தயம், பாசிப்பயறு இரண்டையும் கலந்து இரவு ஊறவைத்து பின்னர் காலையில் அரைத்து தலையில் தேய்த்து ஊறியபின்னர் குளித்து வந்தால் தலைமுடி குளிர்ச்சி பெறும். பொடுகு மறையும்.

### தேமல் மறைய

சீதாப்பழத்துடன், சிறிது வெள்ளைப் பூண்டு வைத்து மைய்யமாக அரைத்து, தேமல் மீது பூசி வந்தால் தேமல் மறையும்.

### சளி தொந்தரவு வராமல் தடுக்க

சீதாப்பழத்தில் கணிசமான அளவு விட்டமின் சி உள்ளதால், சளி பிடிக்காது தடுக்கும் தன்மையை உண்டாக்கும். சளி பிடித்தவர்கள், இந்தப் பழத்தைச் தொடர்ந்து சாப்பிட்டால் நன்கு வெளியேறி விரைவில் குணமாகும்.

### நிம்மதியான உறக்கத்திற்கு

சீதாப்பழத்துடன் இரண்டு பேரீச்சம் பழமும் சேர்த்து இரவில் படுக்கப் போகும் முன் சாப்பிட்டு வந்தால் நன்கு தூக்கம் வரும். தூக்கம் வராமல் அவதிப்படுபவர்களுக்கு, இது ஒரு நல்ல எளிய இயற்கை மருந்து.

### பித்தம் நீங்க

சீதாப்பழத்துடன், சிறிது இஞ்சிச்சாறு, கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வந்தால் பித்தம் மொத்தமாக விலகும்.

### சரும வறட்சி நீங்க

சீதாப்பழச்சாற்றை சரும வறட்சி உள்ளவர்கள் தினமும் குடித்து வந்தால், சரும வறட்சி நீங்கி இயல்பு நிலை பெறும்.

### குடற்புண் குணமாக

சீதாப்பழத்துடன் சிறிது வெந்தயத்தை ஊற வைத்து சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடற்புண் விரைவில் குணமாகும்.

### சிறுநீர் பிரிதல், நீர்க் கடுப்பு நீங்க

சீதாப்பழச் சாறுடன், சிறிது எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடித்து வந்தால் சிறுநீர் பிரியாமல் அவதிப்படுபவர்களுக்கு சிறுநீர் தாராளமாகப் பிரியும். நீர்க்கடுப்பும் நீங்கும்.










## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**



தொடர்பு கொள்ளவும்:

**ஆசிரியர்: நாகராஜன்**

16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்

பொன்மணிமாளிகை அருகில்,

சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா

தொலைபேசி 7299992699/ 8939499598

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை

# விஷத்தை முறிக்க எண்ணை உறிஞ்சும் சிவபெருமான்



தஞ்சை மாவட்டம் திருநீலக்குடியில் உள்ளது அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோவில். பல ஆயிரம் வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட இந்த பழமையான கோவில் சோழர்களால் கட்டப்பட்டது ஆகும்.

இத்தல இறைவனின் பெயர் நீலகண்டேசுவரர் இறைவியின் பெயர் ஒப்பிலாமுலையாள் ஆகும். இத்தலத்தில் இறைவன் நீலகண்டேஸ்வரருக்கு செய்யப்படும் நல்லெண்ணய் அபிஷேகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. எவ்வளவு எண்ணெயை ஊற்றினாலும் அதை அப்படியே தன்னுள் உறிஞ்சிக்கொள்ளும் ஒரு அதிசய சிவலிங்கத்தை கொண்ட திருத்தலம்தான் திருநீலக்குடி சிவன் கோவில்.

இங்குள்ள மூலவருக்கு சிறப்பு அபிஷேக பொருளாக விளங்குவது நல்லெண்ணெய். பாத்திரம் பாத்திரமாக நல்லெண்ணையை சுவாமியின் மீது ஊற்றி அபிஷேகம் செய்வார்கள்.

எவ்வளவு எண்ணெய் ஊற்றி அபிஷேகம் செய்தாலும் அத்தனையும் சிவலிங்கத்திற்கு உள்ளேயே உறிஞ்சப்பட்டு விடுவது அதிசயமாக உள்ளது. நாள் முழுவதும் எண்ணெய் அபிஷேகம் செய்தாலும் அத்தனையும் உறிஞ்சப்பட்டு விடுகிறது. இதில் ஆச்சர்யம் என்னவெனில் அபிஷேகம் செய்த அடுத்த நாள் சுவாமியை பார்த்தால் அவரது லிங்கத் திருமேனி கிட்டதட்ட 1 வருடமாக எண்ணெயே தடவாதது போல் அவ்வளவு உலர்ந்து காய்ந்து காணப்படும்.



அபிஷேகம் செய்யப்படும் எண்ணெயெல்லாம் எங்கு மாயமாகிறது என்பது இன்னும் புலப்பட வில்லை. எண்ணெய் அபிஷேகம் செய்யப்பட்டுக் கொண்டே இருப்பதால் சிவலிங்கத் திருமேனி வழுவழுப்பாக இருப்பதற்கு பதில் சொர சொரப்பாகவே இருக்கிறது.

நாள் முழுக்க பாத்திரம் பாத்திரமாக ஊற்றப் படும் எண்ணெயை சிவலிங்கம் எப்படி உறிஞ்சுகிறது? உறிஞ்சப்படும் எண்ணெய் என்ன ஆகிறது? இப்படி எந்த கேள்விகளுக்கான விடையும் இதுவரை யாராலும் கண்டறிய முடியவில்லை.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்த போது வந்த நஞ்சை சிவன் உண்ட கதை நமக்கு தெரியும். அந்த நஞ்சின் விஷத் தன்மையை குறைக்க, சிவனின் தொண்டைப்பகுதியில், பார்வதி தேவி எண்ணை தேய்த்து தடவிவிட, விஷம் இறங்காமல் சிவனின் தொண்டையிலேயே நின்று விட்டது.

இதை உணர்த்தும் விதமாகத்தான் இத்தலத்து இறைவனுக்கு திருநீலகண்டன் என்ற பெயர் உருவானதாக கூறப்படுகிறது. இதன்காரணமாகத்தான் இத்திருத்தலத்தில் சிறப்பு அபிஷேகமாக எண்ணையை பயன் படுத்தப்படுகிறது என்பது ஐதீகமாக உள்ளது.

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

www.aanmeegamalar.com

# உங்கிட்ட இருக்கிற பணத்துக்கு நீ, டிரஸ்டி, அவ்வளவுதான். சொந்தக்காரன்னு நினைச்சுக்காதே

பெரியவாளை சந்திந்த ஒரு நபர் வந்திருந்தார், கஞ்ச மகா பிரபு என்று எவரையாவது சொல்ல வேண்டுமென்றால் அவரைத்தான் சொல்ல வேண்டும்.

அந்த கஞ்ச மகா பிரபுவுக்கு, காசுக்குப் பஞ்சமில்லை, செலவழிக்க, அனுபவிக்க மனம்தான் இல்லை.

பெரியவாள் தரிசனத்துக்கு வந்தார்.

வலதுகையால் வாயை மறைத்துக்கொண்டு உருக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

“எனக்கு ரத்த அழுத்தம், டயாபடீஸ் இரண்டும் ரொம்ப நாளா இருக்கு.இப்ப கன்ஸர் வேறே வந்திருக்கு. ரொம்பக் கஷ்டமா இருக்கு. பெரியவா பரிஹாரம் சொல்லணும்...”

“நான் சொன்னால் சொன்னபடி செய்வாயா?”

“செய்யறேன்.”

“ரொம்பக் கஷ்டமா இருக்குமே..”

“இருக்கட்டும். வியாதி நீங்கினால் போதும்.... பெரியவா என்ன உத்திரவு போட்டாலும், அதன்படி நடக்கிறேன்..... ப்ளட்பிரஷர், கான்ஸர், ஷூகர்ல் லாம் என்னை விட்டுவிட்டுப் போனால் போதும்...” என்று சொல்லிவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

பொதுவாகவே, அவ்யாஜ கருணை (காரண மில்லாத கருணை) பெரியவாளுக்கு. இவரோ கண்ணீர் விட்டு சரணாகதி பண்ணுகிறார். கைவிட முடியுமா?

பெரியவாள் சொன்னார்கள்.

1. கிணற்றில் தண்ணிர் இருக்கு. ‘தண்ணீர் என்னுடையதுதானே’ என்று சொந்தம் கொண்டாடி,கிணறே தண்ணிரைக் குடித்து விடுவதில்லை.
2. மரத்தில் பழம் பழுக்கிறது. ‘என் மரத்துப் பழம்; நான்தான் சாப்பிடுவேன்’ என்று மரம் பழங்களைச் சாப்பிடுவதில்லை.
3. பசுமாடு பால் கொடுக்கிறது; பசுமாடு பால் குடிப்பதில்லை.
4. எத்தனையோ செடிகொடிகள், காய் காய்க்கின்றன ஒரு காயைக்கூட அவைகள் தமக்கு என்று வைத்துக் கொள்வதில்லை.

இப்படி ஓரறிவு ஈரறிவு படைத்த பிராணிகளே கூட, பரோபகாரம் செய்கின்றன. மனிதனுக்கு ஆறறிவு என்கிறார்கள். அவன் மற்றவர்களுக்கு எவ்வளவு உபகாரம் செய்யணும்?”

“உன்னிடம் பணம் இருக்கு. நீயும் சரியாக அனுபவிக்கல்லே, பரோபகாரம்தர்மம் செய்யல்லே.

“போன ஜன்மத்துப் பாவங்கள் ஒன்று சேர்ந்து வியாதியாக வந்து உன்னைப் படுத்துகிறது. பாவம் போகணுமானால் தானதர்மம் செய்யணும்.”

“இஷ்டாபூர்த்தம்னு தர்ம கார்யம் தெரியுமோ? குளம் வெட்டுவது, கோயில் திருப்பணி, ஏழைகளுக்கு உதவி, சொந்தக்காரர்களுக்கு உதவி இப்படி, நல்ல காரியங்களிலே பணத்தைச் செலவிடணும். அப்புறம்... வியாதிகளால் கஷ்டப்படுகிற அநாதைகளுக்கு மருந்து வாங்கிக்கொடு. அம்மா, அம்மான்னு ஒருத்தன் கை நீட்டினால், அவன் வெறுங்கையோட போகப்படாது என்ன?

“உங்கிட்ட இருக்கிற பணத்துக்கு நீ, டிரஸ்டி, அவ்வளவுதான். சொந்தக்காரன்னு நினைச்சுக்காதே...”

கஞ்ச மகாப்பிரபு குலுங்கிக் குலுங்கி அழுதார், பின்னர் கர்ண மகாப்ப்ரபுவாக நெடுங்காலம் ஜீவித்திருந்தார்.

பெரியவா, ஒரு ஸ்பெஷலிஸ்ட் எல்லா நோய்களுக்கும் “நோய் நாடி,நோய் முதல் நாடி,” நோயாளிகளின் உள்ளமும் நாடி அதற்கேற்ற மருந்து கொடுப்பார்கள்.



# உடல் நலனை காக்கும் இயற்கை வழிமுறைகள்



- மாங்காய் மாம்பழம் அதிகமாக சாப்பிட்டால் அதற்குப் பால் ஒரு டம்ளர் குடிக்கவும்.
- உணவில் அதிக நெய் சேர்த்தால் ஒரு கப் எலுமிச்சை ஜூஸ் குடிக்கலாம்.
- பலாப்பழம் அதிகம் சாப்பிட்டால் ஒரு வாழைப்பழம் சாப்பிடலாம் கேக் நிறைய சாப்பிட்டால் அதற்கு ஒரு டம்ளர் வென்னீர் குடிக்கவும்.
- கனமான உணவு வகைகள் அதிகம் சாப்பிட்டால் சுக்கு வெல்லம் சாப்பிடலாம் அல்லது சுக்கு காப்பி தயாரித்து குடிக்கலாம்.
- தேங்காய் தேங்காயில் செய்த பதார்த்தங்களை அதிக அளவு சாப்பிட்டு விட்டால் அதற்கு கொஞ்சம் அரிசி எடுத்து மென்று சாப்பிடவும்.
- குடல் புண் அதிகம் இருந்தால் அடிக்கடி வாழைப்பூ, சமைத்துச் சாப்பிடலாம்.
- மஞ்சள்காமாலையால்பாதிக்கப்பட்டவர்களுக்கு வெள்ளை முள்ளங்கி அருமருந்து. அதை சாலட் ஆகவும் தயிர்பச்சடி ஜூஸ் என குடிக்க மஞ்சள் காமாலையிலிருந்து விடுபட்டு உடலும் ஆரோக்கியம் பெறும்,
- காய்ச்சலுக்கு தண்ணீர் அதிகம் குடிக்க காய்ச்சலின் வேகம் குறையும். கருந்துளசி நீர் காய்ச்சலைக் குறைக்கும்.
- உடல் கொழுப்பிற்கு வாழைத்தண்டை ஜூஸ் அல்லது கறி கூட்டு செய்து சாப்பிடலாம். இதனால் கொழுப்பு குறைந்து உடல் எடையும் குறையும்.
- வெட்டை சூடு தணிய வல்லாரை இலை சின்ன வெங்காயம் சாப்பிடலாம்.
- உடல் உஷ்ணத்திற்கு சீரக நீர் இளநீர் வெந்தயம் ஊறவைத்த நீர் அருந்தக் கொடுக்கலாம்.


ஆன்மிகமலர் மெயில் புக்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
8842544033 / 8939499598

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033
7299992699 / 8939499598





# உறுப்பினராகுங்கள்...

ஆன்மீக செய்திகளையும், இந்துமதத்தின் சிறப்புகளையும், பெருமைகளையும் உலகெங்கும் உள்ள மக்களுக்கு எளிமையாக எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட நமது

## ‘ஆன்மிகமலர் டிரஸ்ட்’டில் உறுப்பினராகுங்கள்

**Tamilnadu Government Redg.304/2016**

மாதந்தோறும் நன்கொடை சந்தா தரும் உறுப்பினர்கள், ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் சார்பில் வெளிவரும் ‘ஆன்மிகமலர்.காம்’ இணையதளம் மற்றும் ‘ஆன்மிகமலர் மெயில் புக்’ ஆகியவற்றின் ஆசிரியர் குழுவில் இணைந்து எங்களுடன் இறைபணி செய்யலாம். மாதம் இருமுறை வெளிவரும் இதழில் உறுப்பினர்களின் புகைப்படத்துடன், தொலைபேசிஎண், இமெயில் முகவரி (மாதிரி படம் கீழே) போன்றவையும் தொடர்ந்து வெளியிடப்படும்.

20 நபருக்கும் குறைவான உறுப்பினர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

உறுப்பினர்கள் தரும் நன்கொடை சந்தா நமது இதழ் தொடர்ந்து வெளிவருவதற்கும், ஆன்மிகமலர்.காம் இணையதளம் தொடர்ந்து இயங்கவும் பயன்படும்.

**தொடர்பு கொள்ளவும் போன்: 088258 44033**

காலை7மணி முதல் மாலை5மணி வரை இந்திய நேரம்

இதழில் பிரசுரிக்கு உறுப்பினர் (மாதிரி படிவம்)



பெயர்: கீதாராணி
சென்னை, போன்: 7770077700
e-mail: geeeethala@gmail.com



பெயர்: ஷ்யாம்சுந்தர்
சென்னை, போன்: 7347077703
e-mail: shyammmm@gmail.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் உறுப்பினர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்படும், உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட இந்துசமய ஆன்மிக நிகழ்ச்சிகள் நமது மின்னிதழிலும், இணையதளத்திலும் பிரசுரிக்கப்படும். உறுப்பினர்களின் கருத்துகள் பரிசீலிக்கப்படும். உறுப்பினர்கள் நமது இதழின் ஆசிரியர் குழுவில் ஒன்றிணைக்கப்படுவார்கள்.

# சித்திரைமாத வருடப் பிறப்பைக் கொண்டாடுவதன் காரணம்

புது வருடம், பல விதங்களில் கொண்டாடப்பட்டு வருகிறது. கிறிஸ்தவ காலண்டர்படி ஜனவரி 1ம் தேதி புது வருடத்தைக் குறிக்கிறது. ஹிந்து கலாச்சாரப்படி, சித்திரைமாத வருடப் பிறப்பு கொண்டாடப்பட்டு, புது கணக்கு ஆரம்பிக்கப்படுகிறது. இவை எல்லாவற்றிலுமுள்ள ஒரே பொதுவான விஷயம், வருடத்திற்கு 12 மாதங்கள் உள்ளன என்பதே. யார் முதலில் இதை அறிவித்தது? எப்படி உலகம் இதை ஒத் துக்கொண்டது? சந்தேகத்திற்கிடமில்லாமல் இதை முதலில் அறிவித்தது வேதங்களே. வேதங்களே, 'ஒரு வருடத்திற்கு 12 மாதங்கள்' என அறிவித்ததால், உலகம் அதனை ஒப்புக்கொண்டுள்ளது. வருடத்தின் எல்லா நாட்களைக் காட்டிலும் ஹிந்து பஞ்சாங்கப்படியான சித்திரைமாத வருடப்பிறப்பு மிக மங்களகரமான நாளாகும். ஆனால், ஜனவரி 1ம் தேதிக்கு இது போன்ற எந்த சிறப்பும் இல்லை. சித்திரைமாத வருடபிறப்பு இயற்கை, சரித்திரம் மற்றும் ஆன்மீக சிறப்பு வாய்ந்தது.

1. இயற்கை காரணம்: சித்திரை மாதத்தில் வசந்த ருது ஆரம்பிக்கிறது. ஹிந்து தர்மப்படி ஒவ்வொரு விசேஷ நாளன்றும், பிரம்ம முஹூர்த்தத்தில் எழுந்து குளித்து புத்தாடை உடுத்தி. ஆபரணங்களை அணிந்து பூஜை செய்வதோடு அந்நாளை ஆரம்பிக்கின்றனர். அப்பொழுது சுற்றுசூழலில் உள்ள நல்ல அதிர்வலைகளால் மனதில் நல்ல ஸம்காரங்கள் ஏற்படுகின்றன. காலங்களில் நான் வசந்தம் என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ரீமத் பகவத்கீதையில் கூறியுள்ளபடி, இதமான சீதோஷ்ண நிலையுடன், இளந்தளிரும், பூக்களும் பூக்கும் காலமிது.

2. சரித்திர காரணம்: ராமனால் வாலி வதம் நடந்த தினம். இராவணாதிகளை அழித்து, ஸ்ரீராமனாக அயோத்திய மாநகரத்திற்கு திரும்பிய தினம். எதிரிகளை ஷாலிவாஹன் வென்றதால், ஷாலிவாஹன சகாப்தம் ஆரம்பித்த தினம்.

3. ஆன்மீக காரணம்: ப்ரம்மா, இன்றே ப்ரபஞ்சந்தை படைத்தார். ஸத்ய யுகம் ஆரம்பித்த தினம். வருடத்தின் முக்கியமான மூன்றரை முகூர்த்தங்களில் இது ஒரு முகூர்த்தம். இன்று, ஒவ்வொரு கணமும் சுப முகூர்த்தமாகும்.

வருடத்தை மங்களகரமாக ஆரம்பிக்க, சித்திரைமாத வருட பிறப்பை கொண்டாடவேண்டும். இந்நாள் ஒரு பொன்னாளாகும். ஹிந்து சாஸ்திரப்படி இந்நாளைக் கொண்டாடுவதால் பல பயன்கள் ஏற்படுகின்றன. கண்மூடித்தனமான மேற்கத்திய காலாச்சார மோகத்தால் ஏற்படும் நஷ்டத்தைத் தடுப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். மேற்கத்திய புத்தாண்டின் முதல் நாள் இரவன்று, மக்கள் குடித்துவிட்டு கேளிக்கை விஷயங்களில் ஈடுபடுகிறார்கள். அதனால், உலக விஷயங்களிலுள்ள பற்றுதலே மனதில் ஸம்ஸ்காரங்களாக படிகின்றன. அதோடு, இரவில் தமோ குணம் நிறைந்திருப்பதால், அவர்களிடமும் தமோ குணம் அதிகமாகிறது. மக்களிடையே தர்மபோதனை இல்லாத காரணத்தால், இளைய தலைமுறையினர் இந்த கேளிக்கைகளில் மாட்டிக் கொள்கின்றனர். பெற்றோர்களுக்கும் இதன் பாதிப்பு தெரிவதில்லை. ஒருவன் மதம் மாறும்போது, மாறிய மதத்தின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி அந்த பண்டிகைகளைக் கொண்டாட ஆரம்பிக்கிறான். அதே போல், நம் உன்னத கலாச்சாரத்தை மறந்து, கிறிஸ்துமஸ்ஸையும் ஆங்கில புத்தாண்டையும் கொண்டாடுவதால் அந்த ஒரு நாள் நாமும் மதம் மாறியவர்களாகிறோம்.

சித்திரை மாத வருடப் பிறப்பு, பிரபஞ்ச ஆரம்பத்தோடு சம்பந்தப்படிருப்பதால், இயற்கையும் படைப்பின் உச்சத்தில், செழிப்போடு விளங்குகிறது. மாறாக, டிசம்பர் 31 அன்று ஆரம்பிக்கும் வருடம், அழிவு காலத்தோடு சம்பந்தப்பட்டது. இந்தக் காலம் பகலுக்குப்பின் தொடரும் இரவைப் போல தமோ குண ப்ரதானமானது. இயற்கையோடு ஒத்துப் போகும்போது மனிதன் பயனடைகிறான். இயற்கைக்குப் புறம்பானதைச் செய்வதால், அழிவு ஏற்படுகிறது அதனால், ஸம்வத்ஸர ஆரம்பமாகும் சித்திரை மாதத்தில் வருடப்பிறப்பை கொண்டாடுவது மிகவும் சிறந்தது.

இச்சிறிய கட்டுரையில் இருந்து நாம் அறிந்துக் கொண்ட விஷயத்தை நடைமுறை படுத்த சில குறிப்புகள்:

1. இன்னொரு ஹிந்துவுக்கு டிசம்பர் 31ம் தேதி அல்லது ஜனவரி 1ம் தேதி அன்று புத்தாண்டு வாழ்த்துக்களைக் கூறாதீர்கள்.
2. இன்னொரு ஹிந்து அவ்வாறு வாழ்த்து தெரிவித்தால், இது தவறு என்பதை பொறுமையாக அவருக்கு எடுத்து சொல்லி, சித்திரை மாதப் பிறப்பே நம்முடைய உண்மையான புத்தாண்டு என்பதைத் தெரியப்படுத்துங்கள்.
3. நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஜனவரி 1ம் தேதி அன்று புத்தாண்டு வாழ்த்து அனுப்புவதை விடுத்து சித்திரை மாத வருடப்பிறப்பன்று வாழ்த்து மடலை அனுப்புங்கள்.
4. இந்த முக்கியமான விஷயத்தை உங்களுக்கு தெரிந்த அனைவருக்கும் கூறி, தமிழ்ப் புத்தாண்டு அல்லாத வேறு ஒரு நாளில் புத்தாண்டு கொண் டாடும் பெரும் பாவத்தை அவர்கள் செய்யாமல் தடுத்து நிறுத்துங்கள்.
5. நினைவில் இருத்திக் கொள்ளுங்கள், சித்திரை மாத வருடப்பிறப்பைக் கொண்டாடுவதன் மூலம், தர்மம், தேசம் மற்றும் மொழியின் மீது பற்றுதல் வளரும்.

இன்று ஹிந்து தர்மம், பல விதங்களில் மேற்கத்திய கலாச்சார மோகத்தால் தாக்குதலுக்குள்ளாகிறது. இதை எதிர்த்து போராடுவது ஒவ்வொரு ஹிந்துவின் கடமையாகிறது. ராவண ஸம்ஹாரம் செய்து ராமன் அயோத்திக்குத் திரும்பி அன்று வெற்றிக்கொடி நாட்டியதைப் போல் இன்று ஹிந்துக்கள் மேற்கத்திய கலாச்சார மோகம் என்ற ராவணனை வதம் செய்து புதுவருட வெற்றிக்கொடியை நாட்ட வேண்டும்.

உன்னத ஹிந்து கலச்சரதைப் பின்பற்றி, தெய்வீக ஹிந்து ராஜ்யத்தை நிர்மாணிப்போம்.

மேலும் விவரங்களுக்கு:
www.hindujagruti.org
தொ.எண்: 9380949626

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

நாடாண்ட மன்னனும், நூல் பல கற்ற பண்டிதரும் கடைசியில் பிடி சாம்பல் ஆவார்கள்

# திருநீற்றின் பெருமைகள்

நெற்றியில் பிரம்மன் எழுதிய தலையெழுத்தை அழித்து, இறையருளை பதிக்கும் தன்மையும் திருநீறுக்கு இருப்பதாக சொல்லப்படுகிறது.

நெற்றியில் அணியும் திருநீறு விளக்கும் உயர்ந்த தத்துவம் என்னவென்றால், 'நாடாண்ட மன்னனும், நூல் பல கற்ற பண்டிதரும் கடைசியில் பிடி சாம்பல் ஆவார்கள்' என்பதாகும். மனித உடலில் நெற்றி என்பது மிக முக்கிய பாகமாக இருப்பதால், அதன் வழியாக அதிக சக்தி வெளிப்படுவதோடு, இயற்கையின் மற்ற சக்தி அம்சங்களையும் தமக்குள் ஈர்த்துக்கொள்ளும் வர்ம பகுதியாகவும் அது உள்ளது.

சூரிய கதிர்களின் சக்தி அலைகளை ஈர்த்து, நெற்றி வழியாக கடத்தும் வேலையை திருநீறு நன்றாக செய்யும். அதனால் நெற்றியில் திருநீறு பூசுவது என்பது பல உள்ளர்த்தங்களை கொண்டதாக அறியப்படுகிறது. இரட்சை, சாரம், விபூதி, பஸ்மம், பசிதம் என்று திருநீறுக்கு பல பெயர்கள் உள்ளன. நெற்றியில் பிரம்மன் எழுதிய தலையெழுத்தை அழித்து, இறையருளை பதிக்கும் தன்மையும் திருநீற்றுக்கு இருப்பதாக சொல்லப்படுகிறது.

திருநீறு மருத்துவ குணமுடையது. ஆதலால் திருநீறை நீரில் குழைத்து நெற்றியில் பூசினால் கபாலத்தில் உள்ள நீர் வற்றி பல வியாதிகள் தீரும் என்பது இன்று வரையில் கடைப்பிடிக்கப்படும் வழிமுறையாக உள்ளது. திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு ஏற்பட்ட வயிற்று நோய்க்கு, அவரது தமக்கையார் வயிற்றில் திருநீறு பூசி, குணம் பெறச் செய்த வரலாற்றை பெரிய புராணத்தில் காணலாம். திருநீற்றின் பெருமையானது புராண காலம் முதலாக, இன்று வரையிலும் சிறப்பு பெற்றதாக இருக்கிறது.

### திருநீறு அணிய இரு முறைகள்:

திருநீறு தரிப்பதற்கு பொதுவாக இரண்டு முறைகள் உள்ளன. முதலாவது 'உத்தூளனம்' எனப்படும் இடைவெளி இல்லாது நெற்றி மற்றும் பிற இடங்களில் பூசும் முறையாகும். இரண்டாவதாக 'திரிபுண்டரம்' எனும் முறையில், ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல் ஆகியவற்றால் மூன்று கோடுகளாக பூசும் முறையாகும். 'விபூதியை ஒருவர் மற்றவருக்கு கொடுக்கும்போது, கொடுப்பவரது குணநலன்கள் வாங்குபவரை பாதிக்கும். எனவே நல்ல குண நலன்கள் உள்ளவர்களிடம் மட்டும் திருநீறை பெற வேண்டும்' என்று தமது 'அகத்தியர் பரிபூரணம்' என்ற நூலில் அகத்திய மகரிஷி குறிப்பிடு கிறார்.

எந்தப் பொருளையும் தீயிலிட்டால் வெப்பத்தின் காரணமாக முதலில் அது கறுப்பாக மாறும். பிறகு படிப்படியாக நெருப்பால் எரிக்கப்பட்டு சுத்த வெளுப்பாக மாறிவிடும். அது அப்பொருளின் முடிவான நிலையாகும். பஸ்பமாக நீறு வெளுத்துப் போவதற்கு முன்னர் அது கரியாக மாறும். 'கார்பன்' எனப்படும் கரியாகிய வைரம்தான் இவ்வுலகத்தில் மதிப்பு மிக்க பொருளாக இருக்கிறது. கரியாக உள்ள பொருளைவிட, மிகவும் உயர்ந்தது நீற்றுப்போன திருநீறு என்று போற்றப்படுகிறது.

### அணியும் முறைகள் :

உள்ளங்கையானது பிரம்மா மற்றும் விஷ்ணு பாகமாக கருதப்படுவதால், திருநீறை உள்ளங்கையில்தான் பெற வேண்டும். ஆண்கள் 'திரிபுண்டரம்' எனப்படும் நீரால் கலக்கி மூன்று கிடைக்கோடுகளாகவும், 'உத்தூளனம்' எனப்படும் வெறும் விபூதியாகவும் அணிய வேண்டும் என்பதும், பெண்கள் தண்ணீர் விடாமல் அணியவேண்டும் என்பதும் சாஸ்திரம்.

மூன்று விரல்களும் ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் வடிவமாகும். இதில் ஆள்காட்டி விரலால் இடப்படும் கோடு ரிக் வேதம், நடுவிரல் யஜூர் வேதம், மோதிரவிரல் சாம வேதம் ஆகிய மூன்று வேதங்களையும் குறிக்கிறது. மூன்று கோடுகள் இடுவது வேதங்களை குறிப்பது மட்டுமல்லாமல், மேலும் பற்பல அர்த்தங்களையும் குறிப்பதாக உள்ளது.

திருநீறு அணியும் ஆண்கள் தண்ணீரில் அதைக் குழைத்து, ஆள்காட்டி விரல், நடுவிரல் மற்றும் மோதிர விரல் ஆகியவற்றால் எடுத்து, மூன்று கோடுகளாக நெற்றி, கழுத்து, மார்பு, தோள்கள், தொப்புளுக்கு மேல்புறம், முழங்கைகள், மணிக் கட்டுகள், விலா, முழங்கால்கள் ஆகிய பகுதிகளில் அணிய வேண்டும். காலை, மதியம், மாலை மூன்று நேரங்களிலும், பூஜை காலங்களிலும் விபூதி பூசு வது அவசியம்.



### திருச்செந்தூர்திருநீறு:

முருகப்பெருமானின் ஆறு படை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரில், முருகன் சன்னிதியில் விபூதி மற்றும் சந்தன பிரசாதமானது பக்தர்களுக்கு பன்னீர் இலையில் வைத்து தரப்படுகிறது. முருகனுக்கு பன்னிரு கரங்கள் இருப்பது போல பன்னீர் மரத்தின் இலைகளிலும் பன்னிரண்டு நரம்புகள் இருக்கும். முருகனை வணங்கும் பக்தர்களுக்கு, அவன் தனது பன்னிரு திருக்கரங்களால் விபூதி, சந்தன பிரசாதத்தை வழங்குவதாக ஐதீகம்.

அத்தகைய பிரசாதமானது 'பன்னீர் செல்வம்' என்றே பக்தர்களால் வழங்கப்படுகிறது. ஆதிசங்கரர் அந்த இலையில் தரப்பட்ட விபூதியை உட்கொண்டு தமது உடல் நோயை நீக்கிக் கொண்டு 'ஸ்ரீசுப்பிரமணிய புஜங்கம்' பாடியதாக கூறப்படுகிறது.

இந்த விபூதி இலை பல நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாக இருப்பதால், திருச்செந்தூர் செல்பவர்கள் இதைத் தவறாது பெற்று செல்வது வழக்கம்.

தேவாரம், திருவாசகம், திருமந்திரம் அடங்கிய பன்னிரண்டு திருமுறைகளை, அனைவராலும் முழுமையாக பாட இயலாது. அதன் சாராம்சத்தை சுருக்கி மந்திரம் மூலம் இறைவனை வணங்க அருளாளர்கள் செய்த உபாயமே ஐந்தெழுத்து சிவமந்திரமான 'நமசிவாய' என்பதாகும். திருநீறு அணியும் சமயங்களில் 'நமசிவாய' மந்திரத்தை மனதால் நினைத்து அணிவது திருமுறைகளை பாடிய பலனைத் தர வல்லது.

நன்றி:
சிவநெறி ஆகம சிறப்புகள்

# பில்லி, சூனியம் வஞ்சனைகளை போக்கும்

# முருக வழிபாடு

மனிதர்களுக்கு சுக துக்கம் என்பது மனித மனம் பக்குவமடைய வேண்டும் என்பதாற்காகவும், முன்ஜென்ப பலா பலனால் விளையக் கூடியதாகவும் இருந்தாலும், ஒருசில எதிர்மறையான கெடுதல் தரும் பலன்களை ஒருசில வழிபாடுகள் மூலம் எளிமையாக தீர்த்துக் கொள்ளலாம். அந்த வகையில் முருகப்பெருமானை மயில் வடிவில் வழிபடும்போது பல பிரச்சனைகளுக்கு தீர்வாகும் என்றும் கூறப்படுகிறது.

ஓம் என்னும் மந்திரத்தின் வடிவமான மயில் மீது முருகன் காட்சியளிப்பதாக புராணங்கள் கூறுகின்றன. அதனால் இந்த மயிலுக்கு ‘மந்திர மயில்’ என்று பெயர்.

மயில் மீது முருகனை தரிசிப்பதை ‘குக ரகசியம்‘ என்றும் ‘தகராலய ரகசியம்‘ என்றும் ஞானிகள் குறிப்பிடுவர். பாம்பன் சுவாமிகள், மயில் மேல் முருகன் எழுந்தருள வேண்டும் என்ற விதத்தில் பத்து பாடல்கள் பாடியுள்ளார்.

இந்த பாடல்களைப் பக்தியுடன் படிப்போருக்கு முருகனை தரிக்கும் பாக்கியம் உண்டாகும் என்று பாம்பன் சுவாமிகளே குறிப்பும் எழுதியுள்ளார்.

‘ஸ்ரீமத் குமாரசுவாமியம்’ என்னும் நூலில் ‘பகை கடிதல்’ என்னும் தலைப்பில் இப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

முருகனை காண உதவும் பகை கடிதல் பாடல்களை கீழே தரப்பட்டுள்ளது.

திருவளர் சுடர் உருவே, சிவைகரம் அமர்உருவே,
அருமறை புகழ்உருவே, அறவர்கள் தொழும்உருவே
இருள்தபும்ஒளிஉருவே, எனநினை எனதுஎதிரே,
குருகுகன்முதல்மயிலே,கொணர்திஉன்இறைவனையே.

மறைபுகழ் இறைமுனரே, மறைமுதல்பகர்உருவே,
பொறைமலிஉலகுஉருவே, புனநடை தரும்உருவே
இறைஇளமுகஉருவே, எனநினைஎனதுஎதிரே
குறைவுஅறுதிருமயிலே, கொணர்திஉன்இறைவனையே.

இதரர்கள்பலர்பொரவே, இவன்உறை எனதுஎதிரே
மதிரவி பலஎனதேர், வளர்சரன்இடைஎனமா,
சதுரொடு வருமயிலே, தடவரைஅசைவுஉறவே,
குதிதரும்ஒருமயிலே, கொணர்திஉன்இறைவனையே.

பவநடை மனுடர்முனே, படர்உறும்எனதுஎதிரே
நவமணி நுதலணிஎர், நகைபல மிடறுஅணிமால்,
சிவணிய திருமயிலே, திடனொடு நொடிவலமே
குவலயம்வருமயிலே, கொணர்தி உன்இறைவனையே.

அழகுஉறுமலர் முகனே, அமரர்கள்பணிகுகனே,
மழஉரு உடையவனே, மதிநனி பெரியவனே
இழவுஇலர்இறையவனே, எனைநினைஎனதுஎதிரே
குழகுஅதுமிளிர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே.

இணைஅறும்அறுமுகனே, இதசசிமருமகனே,
இணர்அணிபுரள்புயனே,எனநினை எனதுஎதிரே,
கணபணஅரவுஉரமே, கலை(வு)உறஎழுதரும்ஓர்
குணம்உறு மணிமயிலே, காணர்திஉன்இறைவனையே.

எளியவ, என் இறைவ, குகாஎனநினைஎனதுஎதிரே
வெளிநிகழ்திரள்களைமீன், மிளிர்சினைஎனமிடைவான்,
பளபள எனமினுமா பலசிறைவிரிதருநீள்,
குளிர்மணி விழிமயிலே, கொணர்தி உன் இறைவனையே

இலகுஅயில்மயில்முருகா, எனநினைஎனதுஎதிரே,
பலபல களமணியே, பலபல பதமணியே
கலகல கலஎனமா, கவினொடுவருமயிலே,
குலவிடு சிகைமயிலே, கொணர்தி உன் இறைவனையே.

இகல் அறுசிவகுமரா, எனநினை எனது எதிரே
சுகமுனிவரர் எழில்ஆர், சுரர் பலர்புகழ்செயவே,
தொகுதொகு தொகுஎனவே, சுரநடம் இடுமயிலே,
குகபதி அமர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே.

கருணைபெய் கனமுகிலே, கடமுனிபணிமுதலே,
அருணையன்அரன்எனவே,அகம்நினைஎனதுஎதிரே
மருமலர் அணிபலவே,மருவிடு களமயிலே,
குருபல அவிர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே.

இதனை தொடர்ந்து பாராயணம் செய்து வந்தால் கனவிலும், நனவிலும் முருகனின் அருள் உண்டாகும்.

இப்பாடலை பாராயணம் செய்யும் போது, அசைவம் சாப்பிடுவதை தவிர்த்துவிட வேண்டும், முதன் முதலில் ஆரம்பிக்கும் போது செவ்வாய் கிழமை அல்லது கிருத்திகை நட்சத்திரம் அல்லது விசாக நட்சத்திரம் அல்லது சஷ்டி திதி அன்று வீட்டிற்கு அருகில் உள்ள முருகன் தலத்தில் 9 முறை பாராயணம் செய்ய வேண்டும். முருகன் தலம் இல்லாவிடில் சிவத்தலத்தில் உள்ள முருகன் சந்நிதியில் 9 முறை பாராயணம் செய்யலாம்.

பின்பு வீட்டிற்கு வந்து முருகனின் படம் முன்போ அல்லது சிலை முன்போ அமர்ந்து 3 முறை பாராயணம் செய்யவும். அதன் பின்பு தினமும் 3 முறை பாராயணம் செய்து வரவும். முருகன் படத்திற்கு பதிலாக பித்தளையால் செய்யப்பட்ட வேல் ஒன்றினை வாங்கிக் கொள்ளலாம். வேலினையே முருகனாக பாவித்து வழிபாடு செய்து வரவும்.

நீங்கள் வாங்கும் வேல் உங்களின் கட்டைவிரலின் உயரத்தை விட 21 மடங்கிற்கு மேல் இருக்கக்கூடாது. ஒரு சாண் அளவை விட குறைவாக இருப்பது நலம். வேலின் உயரம் 6 அங்குலம் இருப்பது மிக சிறப்பு. அதற்கு தினமும் அபிஷேகம் செய்து, விபூதி, சந்தனம் மற்றும் குங்குமம் வைத்து வணங்கி வருதல் நன்று. அவ்வாறு தினமும் அபிஷேகம் செய்ய இயலவில்லை என்றாலும் பரவாயில்லை.

ஐந்து எண்ணெய் ஊற்றி இரண்டு குத்து விளக்குகள் ஏற்றி பாராயணம் செய்யவும். மந்திர சக்தி உண்டாகும். பாராயணம் வெகு விரைவில் பலனளிக்கும். முருகனின் அருளினை வாரி வழங்கக் கூடிய ஆற்றல் கொண்ட துதி ஆகும். பாராயணம் செய்யும் காலத்தில் கனவில் முருகனின் வாகனமான மயில் தோன்றும். அதன் பின்பு கனவில் குமரக்கடவுள் தோன்றுவார் என்பது திண்ணம். நேரில் தோன்றுவது என்பது அவரவர் செய்த புண்ணியத்தினைப் பொறுத்தது.

பாராயணம் செய்யும் காலத்தில் பாராயணத்திற்கு தடைகள் உருவாகலாம். தடைகள் வந்தாலும் அவற்றை கடந்து தொடர்ந்து பாராயணம் செய்து வரவும். அவ்வாறு பாராயணம் செய்தால் நமது கர்ம வினைகள் படிப்படியாக கரைய ஆரம்பிக்கும். அகத்திலும், புறத்திலும் உள்ள பகை நீங்கும் என்பது உண்மையாகும்.

தினமும் 3 முறை பாராயணம் செய்யவும். எதிர்ப்புகள், அனைத்து வித எதிரிகள், ஏவல், பில்லி, சூனியம் போன்ற வஞ்சனைகள் இவற்றை அழித்து முருகனின் தரிசனத்தையும் தந்து என்றும் நிம்மதியாக வாழ முருகனருள் என்றும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.




ஆன்மிகமலர் மெயில் புக்

## இந்த மலர்களைக் கொண்டு பரிகாரம் செய்தால் பிரச்னைகள் தீரும்?

கோவிலிலும் சரி, வீட்டிலும் சரி தெய்வங்களைப் பூக்களை கொண்டு பூஜிப்பது தான் வழக்கம். ஒவ்வொரு தெய்வத்தை வழிபடும் போதும், பூஜை செய்யும் போதும் நாம் பயன்படுத்தும் மலர்கள் வித்தியாசப்படும். அவ்வாறு சிறப்பு வாய்ந்த மலர்களில் எந்த மலர்களை பலன்படுத்தினால் பிரச்னைகளை தீரும் என்று பார்க்கலாம்.

மந்தாரை..............................................நினைத்ததைக் கொடுக்கும்
பாரிஜாதம் ..................................................... ஆயுள் விருத்தி
குறுந்தமரம் பூ ......................................வாஸ்து பரிகார மரம்
பன்னீர் பூ...........................................விபத்துகளை தடுக்கும்.
கொன்றை ....................................................... தீமைகள் விலகும்
தொட்டா சிணுங்கி .........................லட்சுமி கடாட்சம் கிட்டும்.
வில்வம்........................................................அதிர்ஷ்டம் தரும்.
புன்னை ....................................................... திருமணம் கைகூடும்.
கடம்பம் ........................................................ தீமைகளை விரட்டும்
செண்பகப்பூ........சௌபாக்கியம் தரும்.
நெருஞ்சி பூநோய்களை........விரட்டும்.



## பசுவும் மாட்டுத் தொழுவமும்



தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, ஐந்து பசுக்கள் வெளிப்பட்டன. அவை நந்தா, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை ஆகியன. பொன்னிறம், கருமை, வெண்மை, புகைநிறம், சிவப்பு நிறமானவை. இவற்றின் சந்திகளே பூலோகத்தில் வாழும் பசுக்கூட்டமாகும். இந்த ஐந்தும் கிருஷ்ணருக்குரிய கோலோகத்தில் இன்றும் இருப்பதாக ஐதீகம்.

பசுதானம் செய்தால் பிதுர்சாபம், முன் வினைப்பாவம் நீங்கும். திருமந்திரத்தில் திருமூலர் தினமும் பசுவிற்கு புல் இடும்படி வேண்டுகோள் விடுக்கிறார். இதனை வேதம் “கோக்ராஸம்‘ என்று குறிப்பிடுகிறது. ஒருவர், தானம் தரும் பசுவின் உடம்பில் இருக்கும் ரோமங்களின் எண்ணிக்கைக்கு ஈடான ஆண்டுகள் கோலோகத்தில் கிருஷ்ணருடன் வாழும் பாக்கியத்தை அடைவார் என சில நூல்களிலும் தகவல் உள்ளது.



அவ்வையார், “ஆலயம் தொழுவது சாலவும் நன்று’ என்று கோயில் வழிபாட்டோடு, பசுவின் சிறப்பையும் பாடியுள்ளார். ஆலயம் என்ற சொல்லை ஆ+ லயம் என்று பிரித்து “பசுக்கள் சேர்ந்திருக்கும் இடம்‘ என்று பொருள் கூறுவர். அவ்விடத்தை தொழுவது நன்மையைத் தரும் என்பதே இதன் பொருள். பசுமாடுகள் கட்டியிருக்கும் இடம் தொழுவதற்குரிய (வழிபாட்டுக்குரிய) இடமாக இருப்பதால் “மாட்டுத் தொழுவம்‘ எனப்படுகிறது.

தொகுப்பு: மூ.சக்திவேல்
செல்: 9787576858.

## மெய்கண்டார் தந்தையின் நம்பிக்கை

பெண்ணாடத்தில் வசித்த சிவபக்தரான அச்சுதகளப்பாளருக்கு மகப்பேறு இல்லை. தன் குருநாதர் அருள்நந்தி சிவாச்சாரியாரிடரிடம் முறையிட்டார். அவர், நாயன்மார்கள் பாடிய பன்னிருதிருமுறைகள் மீது அபார நம்பிக்கை கொண்டவர். அவர் “கயிறு சாத்துதல்’ என்னும் முறை மூலம் களப்பாளருக்கு குழந்தை பாக்கியம் உண்டா என சோதித்தார். அதாவது, திருமுறை ஏடுகளை சிவன் முன் வைத்து, அதில் கயிறு போட்டு பார்ப்பதாகும் (நாடி ஜோதிடம் போல) அதில் சம்பந்தரின் திருவெண்காட்டுப்பதிகம் வந்தது. அப்பதிகத்தை தினமும் பாராயணம் செய்ய சீடரிடம் கூறினார்.

ஆனால், சிவன் களப்பாளரின் கனவில் தோன்றி, “நீ என்ன செய்தாலும், உனக்கு புத்திர பாக்கியம் இல்லை’’ என்று கூறிவிட்டார். களப்பாளர் அவரிடம்,‘‘சுவாமி! என் ஊழ்வினைப்பயனால் எனக்கு குழந்தை இல்லாமல் போனாலும், தங்கள் அருள்பெற்ற சம்பந்தரின் வாக்கும், நான் இதைப் படிக்க காரணமான என் குருநாதரின் வாக்கும் பொய்யாகலாமா?’’ என்று வருத்தத்துடன் கேட்டார். இந்த நியாயமான கேள்வியில் சிக்கிக் கொண்ட சிவன், அவருக்கு பிள்ளைவரம் அளித்தார். சைவத்துக்கே சாஸ்திரமாக விளங்கும் “சிவஞானபோதம்‘ என்னும் அரிய நூலை இயற்றிய மெய்கண்டார் தான் அந்தக் குழந்தை.





## லட்சுமி தினமும் நீராடும் திருக்குளம்

திருநெல்வேலி மாவட்டம் கீழப்பாவூர் பிரசன்ன வெங்கடாஜலபதி கோயிலில், பதினாறு கரங்களுடன் புடைப்புச் சிற்பமாக நரசிம்மர் உள்ளார். கஷ்யபமுனிவர், வருணன், சுகோஷ முனிவர் ஆகியோரின் தவத்தை ஏற்ற விஷ்ணு இங்கு இரண்யனை மடியில் கிடத்தி வதம் செய்த கோலத்தில் தரிசனம் அளித்தார். சூரியன், சந்திரன் வெண்சாமரம் வீசி பெருமாளை சாந்தப் படுத்தும் நிலையில் உள்ளனர். இவரை நாரதர், பிரகலாதர், பிரகலாதனின் தாய் கயாது ஆகியோர் வணங்கியபடி உள்ளனர். நரசிம்மரின் சீற்றத்தைத் தணிக்கும்வித்தில் நரசிம்மதீர்த்தக்குளம் கோயிலின் முன் உள்ளது. லட்சுமி தினமும் இக்குளத்தில் நீராடி நரசிம்மரை பூஜிப்பதாக ஐதீகம். பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த சடாவர்மன் வல்லபபாண்டியன் இக்கோயிலுக்கு நிலம் வழங்கிய செய்தி கோயில் கல்வெட்டில் உள்ளது. தென் காசி திருநெல்வேலி சாலையில் உள்ள பாவூர்சத்திரத்தில் கோயில் உள்ளது.




ஆன்மிகமலர் மெயில் புக்

# ஆத்மா மாயை என்றால் என்ன? என்ன?

கடவுளை பற்றிய விஷயம் என்று வருகிறபோது ஆத்மா, மாயை என்ற வேறு சில கருத்துக்களும் பரவலாக பேசப்படுவதை நீங்கள் அறிவீர்கள். நாங்களும் எங்களது வாழ்வில் அன்றாடம் இந்த வார்த்தைகளை ஏதாவது ஒரு சமயத்தில் பயன் படுத்துகிறோம். நமது இந்தியாவை பொறுத்தவரை இந்த வார்த்தைகளை பயன்படுத்தாத மொழிகளே இல்லை என்று துணிச்சலாக கூறலாம். ஆத்மா மாயை என்ற வார்த்தைகளை கூறுகிற போது புரிவது போல் தெரிகிறது. கேட்கும் போதும் அறிந்து கொண்டது போல் உணர்வும் வருகிறது.

ஆனால் தர்க்க ரீதியில் ஆத்மா என்றால் என்ன? மாயை என்றால் என்ன? என்று யாராவது கேட்டால் எங்களால் நிச்சயம் விளக்கம் கூற இயலாது.



காரணம் நாங்கள் அந்த வார்த்தையை புரிந்துகொண்ட அளவிற்கு விளக்கம் சொல்ல முடியாதவர்களாக இருக்கிறோம். அப்படியே விளக்கம் கூறினாலும் அரைகுறை விளக்கமாகத்தான் சொல்ல முடிகிறது.

எனவே தாங்கள் இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் எளிமையான தத்துவ விளக்கத்தை கூறினால் நன்றாக இருக்கும். என்று கருதுகிறோம். இப்படி சில சீடர்கள் கேட்டதும் குருஜி அவைகளை பற்றி விளக்க சித்தமானார்.

ஆட்டுக்குட்டியின் உயிருக்காக தனது உயிரை கொடுக்க துணிந்த புத்தருக்கு பிறகு வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தை திருப்பி காட்டு என்று கூறிய ஏசுநாதர் கருணையின் வடிவாக நமக்கு தெரிகிறார். ஏசுநாதரின் பல உபதேசங்களை கேட்கிறோம். கிறிஸ்தவ மத நூலான புதிய ஏற்பாட்டையும் படித்து பார்க்கிறோம். அவற்றில் எல்லாம் சாத்தான் என்ற ஒரு கதாபாத்திரம் மிக அதிகமாக உலாவுவதை காண முடிகிறது. இஸ்லாம் மதத்தில் கூட சாத்தானை பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. இந்த சாத்தான் என்பது யார்? இதை படைத்தது யார்? அதற்கு இவ்வளவு சக்தி கொடுத்தது யார்? என்ற கேள்வி நம் ஒவ்வொருவருக்கும் வரும்.

ஆபிரகாமிய மதம் என்று அழைக்கப்படுகிற யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம், பார்ஷி போன்ற மதங்களுக்கு சொராஸ்திரியம் என்ற மதம் தான் மூலமானது. இந்த மதத்தின் மைய கருத்து கடவுள் என்ற நல்ல சக்திக்கும் தீய சக்திக்கும் யுத்தம் நடந்து கொண்டே இருக்கிறது. இந்த யுத்தம் எப்போது முடியுமோ? அதாவது யுத்தத்தில் கடவுள் என்று வெற்றி அடைகிறாரோ? அன்று உலகத்தின் இறுதிநாளாக இருக்கும் உலக உயிர்களுக்கு தீர்ப்பு சொல்லும் நாளாக இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதில் வருகிற தீய சக்திதான் சாத்தான். இந்த சாத்தான் இல்லை என்றால் கடவுளுக்கு வேலை இல்லை. கடவுளின் மகத்துவத்தை யாரும் தெரிந்துகொள்ள முடியாது. இருட்டு இருந்தால் தானே வெளிச்சத்தின் அருமை தெரியும். எனவே வெளிச்சத்தின் மறு கூரான இருட்டு என்பது வெளிச்சத்தின் கூடவே இருப்பது என்பது போல சாத்தானும் கடவுள் கூடவே இருப்பதாகும். நாணயத்தின் ஒரு பக்கம் சாத்தான் என்றால் இன்னொரு பக்கம் கடவுள். இரண்டையும் பிரிக்க முடியாது. இரண்டும் சமபலம் வாய்ந்தவைகளாகும்.

மற்ற மதத்தில் சாத்தானுக்கு கொடுக்கபட்டிருக்கின்ற இடம் நமது இந்து மதத்தில் மாயை என்பதற்கு கொடுக்கபட்டிருக்கிறது என்று உறுதியாக சொல்லலாம். சாத்தான் இல்லை என்றால் சாத்தானை வென்றுவிட்டால் கடவுளை அடையலாம். என்பது போல மாயை என்பதை அறுத்துவிட்டால் கடவுளை அடையலாம். மனிதனுக்கும், கடவுளுக்கும் நடுவில் உள்ள திரை மாயை என்பதாகும். அபிரகாமிய மதம் கூறுகிற சாத்தான் தத்துவப்படி வெளி சக்தி அல்ல நமது மனதிற்குள் இருக்கின்ற இருட்டு பகுதியே ஆகும். மாயை என்பதும் மனதிலுள்ள இருட்டு தான்.

மாயை என்பது பற்றி மிக பழமையான கருத்தும் புதுமையான கருத்தும் ஒன்றே ஒன்று தான். மதிமயக்கம் என்பதே மாயை கயிறை பாம்பாக கருதுவதும் பாம்பை கயிறாக கருதுவதும், மதி மயக்கம் தருகின்ற மாயை பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக்கும் பிரம்மம் என்ற கடவுள் என்றும், மாறாதவர் எப்போதும் மாறாதவர், ஆனால் இயற்கை மாறி கொண்டே இருக்கும் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்தது வேறொரு காலத்தில் மற்றொன்றாக இருக்கும். அதனால் உலகத்தின் ஆன்மா கடவுள் என்றால், உலகம் என்ற உடல் மாயை என்று அழைக்கப்படுகிறது. இயற்கை அன்னையை மாயா தேவி என்று பல உபநிஷதங்கள் மிகவும் அழகாக கூறுகின்றன.

இதன் காரணமாகத்தான் கடவுளை காண்பதற்கு திரையாக மாயை இருக்கிறது என்று பெரியவர்கள் கூறினார்கள். பாசி தண்ணீரை மறைப்பதை போலவும், தூசி கண்ணாடியை மறைப்பதை போலவும், ஆடை உடலை மறைப்பதை போலவும் மாயை என்பது இறைவனை மறைத்து கொண்டிருக்கிறது. பாசியை விலக்கி விட்டால் தெளிந்த நீர் தெரிந்துவிடும். அதை போன்று நமது இதய கண்ணாடியில் படிந்து கிடக்கின்ற தூசியை துடைத்துவிட்டால் கடவுள் தெளிவாக தெரிவார்.

ஆதி சங்கரர் அத்வைத கொள்கையை உருவாக்கிய பிறகு தான் மாயை என்பதற்கு எந்த காலத்திலும் ஒப்புகொள்ள கூடிய மிகசிறந்த கருத்துக்கள் உருவாகின. நன்றாக உறங்கி கொண்டிருக்கின்றோம் திடிரென்று விழிப்பு ஏற்படுகிறது. அந்த விழிப்பு முழுமையான விழிப்பாக இல்லை அரைகுறையாய் இருக்கிறது. அந்த நேரத்தில் சுற்றுமுற்றும் பார்க்கிறோம் இது பகலா? இரவா? என்பது தெரியவில்லை. அந்த நேரத்தில் நம் மனதிற்கு பகல் என்று தோன்றினால் அதை நம்புகிறோம். அதை இரவு என்றால் அதையும் நம்புகிறோம் உண்மை எதுவென்று நமக்கு தெரிவதில்லை.

ஒற்றையடி பாதையில் தனிமனிதனாக நடந்து போகிறோம். நமக்கு பின்னால் யாரோ ஓடிவருகிற ஓசை கேட்கிறது. வருகிற வேகத்தில் நிச்சயம் நம் மீது மோதி விடுவார்கள் என்று அவசரப்பட்டு நாமும் ஓடுகிறோம். அப்போது பின்னால் வருவது மனிதனா? அல்லது மிருகமா? என்று தெரிவதில்லை. நம் காதுக்கு கேட்கின்ற சத்தத்தை வைத்து மிருகமென்றோ மனிதனென்றோ தெரி வதில்லை ஆனாலும் எதையாவது ஒன்றை நம்புகிறோம்.

நம்மை சுற்றி இருட்டு இருக்கிறது. இருட்டுக்குள்ளே நிழல் வடிவமாக சில உருவங்கள் தெரிகிறது. அந்த உருவங்கள் நமக்கு நன்மை செய்யுமா? தீமை செய்யுமா? என்று தெரியவில்லை. இருட்டினால் வருகின்ற அச்சம், அபாயம் இல்லாத பொருளை கூட அபாயம் உள்ளதாக காட்டுகிறது. அந்த கற்பனையை அப்படியே நம்புகிறோம்.

விழிப்பு நிலை வந்தபிறகு, அவசரம் முடிந்த பிறகு, பயம் கலைந்த பிறகு உண்மை நிலை தெரிகிறது. நமது தவறான அபிப்ராயத்தை எண்ணி வருத்தப்படுகிறோம். ஒன்றை இன்னொன்றாக கற்பனை செய்து கொள்ளும் மனோபாவம் தான் மாயை என்று சங்கரர் மிக தெளிவான விளக்கத்தை நமக்கு தந்தார். எனக்கு தெரிந்து இதுவரையில் அதற்கு மாறுபட்ட விளக்கத்தை யாரும் தரவில்லை என்று நான் நம்புகிறேன்.

மாயை என்பதை ஒருவித சக்தி என்றும், ஒருவித தத்துவம் என்றும் கூறுகிறார்கள். சுருக்கமாக கூறவேண்டுமென்றால், சுருக்கமாக சுலபமாக புரிந்துகொள்ள வேண்டுமென்றால் தவறாக அர்த்தப்படுத்தி கொள்ளும் ஒரு சக்தி என்று சொல்லலாம். மாயை என்ற இந்த உன்னதமான உணர்வை கடவுள் தத்துவத்திலும் பொருத்தி பார்க்கிறார்கள். அத்வைதிகள் கூறுகிறபடி மாயை இல்லாத நிதர்சனமான பொருளான பிரம்மம் பிரபஞ்சம் போல் நாம் காணுவது மாயையாகும். அதாவது பிரம்மம் எந்த மாறுதலுமின்றி அப்படியே இருக்கிறது. மாயை பிரம்மத்தை மறைப்பதனால் பிரம்மம் பிரபஞ்சமாக உலகமாக தெரிகிறது. இல்லாத பிரபஞ்சம் இருப்பது போல காட்சி அளிக்கிறது.

பிரம்மம் என்பதை அதாவது கடவுள் என்ற சக்தியை பிரபஞ்சமாக தோன்ற செய்வதனால் மாயை என்பது இருக்கும் பொருளாகிவிடுகிறது. அத்வைத கொள்கைப்படி கடவுள் என்ற ஒன்றை தவிர வேறு எதுவுமே கிடையாது. அப்படியானால் மாயை கடவுளை மறைக்கிறது என்று கொண்டோம் என்றால் கடவுளோடு கூடவே மாயை என்ற இரண்டாவது பொருளும் இருப்பதாக கருதவேண்டும். ஆனால் இதற்கு அத்வைதம் மிக தெளிவான மறுப்பை நமக்கு கூறுகிறது. பிரம்மம் என்பது மறைக்கபட்டிருக்கின்ற உண்மை தெரியாத வரையில் தான் மாயை என்பது இருக்கிறது. கடவுளை மறைத்திருப்பது மாயை என்ற உண்மை விளங்கியவுடன் மாயை இல்லாமல் போய்விடுகிறது. கடவுள் மட்டுமே




இப்போது இருக்கிறார். ஆகவே ஒன்று தான் இருக்கிறது என்ற அத்வைதம் மீண்டும் நிலைநிறுத்த படுகிறது.

அப்படியானால் இன்னொரு கேள்வியும் நமக்கு வருவதை தவிர்க்க இயலாது. கடவுளை மறைப்பது மாயை அதை உணர்ந்தவுடன் மாயை மறைந்து விடுகிறது. என்பதை ஏற்று கொண்டால் உண்மையில் மாயை என்ற ஒன்று இருக்கிறதா? என்ற கேள்வி தானாக துளிர்விடுகிறது. இந்த கேள்விக்கு மிகசிறந்த ஞானி என்று போற்றப்படுகிற ஆதி சங்கரரே சற்று மழுப்பலான பதிலை தான் தருகிறார். அவர் கூறுகிறார் மாயை என்பது இன்னதென்று சொல்லப்படாத, சொல்ல முடியாத ஒரு சக்தி என்கிறார். எந்த வகையில் பார்க்க போனாலும் கடவுளுக்கு இணையாக மாயை என்பது இருக்கிறது.

கண்டிப்பாக மாயை என்ற தனிசக்தி உண்டு, அந்த சக்தி இல்லை என்றால் கடவுள் என்ற வெளிச்சத்தை கடவுள் என்ற ஞானத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. பிரம்மம் என்பதும் மாயை என்பதும் ஒருநாணயத்தின் இரண்டு பக்கங்கள். இரண்டையும் பிரிக்க இயலாது, ஒன்றை ஒன்று மறைத்துக்கொண்டு நிற்கிறது. நீ வெளிச்சத்தை காணவேண்டும் என்றால் இருட்டை கடந்தே ஆகவேண்டும். இருட்டை உடைக்காமல், இருட்டை வெட்டி வீழ்த்தாமல் வெளிச்சத்தை தொட உன்னால் இயலாது. மாயை என்பது இருட்டு, மாயை என்பது அறியாமை, மாயை என்பது அகங்காரம் இவைகளை உடைத்தெரியாமல் ஞானம் பெற்றுவிட முடியாது. கடவுளை அடைந்துவிட முடியாது.

மாயை என்பது நமது கண்களுக்கும் கருத்துக்களுக்கும் செய்யும் வர்ண ஜாலங்களை ஒருநிமிடம் சிந்தித்து பார்த்தால் மூச்சு நின்றுவிடுவது போல மலைப்பு வருகிறது. காலையில் கிழக்கு வானத்தில் சூரியனை பார்க்கிறோம் தங்க தாம்பாள தட்டு போல ஜொலி ஜொலிக்கிறது. கைகளை மடக்கி கால்களுக்கு இடையில் கொடுத்து கொண்டு மரவட்டை போல சுருண்டு படுத்து கிடக்கும் குழந்தையை அன்பான அன்னை தட்டி எழுப்புவது போல சூரிய கதிர்கள் நம் மேலே பட்டு காலை பொழுதை உற்சாக பொழுதாக நமக்கு மாற்றி தருகிறது.

மதிய நேரம் சூரியனை பார்க்கிறோம் காலையில் பார்த்த அளவு இப்போது பெரியதாக இல்லை. சிறியதாக இருக்கிறது, உச்சியில் இருக்கிறது காலையில் வந்த இளம் கதிர் ஒன்றை கூட இப்போது அதனிடம் காணமுடியவில்லை. ஜொலித்த சூரியன் இப்போது தகிக்கிறான், வெறும் காலுடன் நடக்க முடியாமல் மண்ணை சூடாக்குகிறான். மரங்களை, மலர்களை வாடவைக்கிறான். உடம்பில் வியர்வை கொப்பளிக்க மனிதர்கள் சோர்ந்து சுருண்டு போகிறார்கள்.

மாலை வருகிறது மேற்கு வானத்தில் சூரியன் தெரிகிறான். காலையில் இருந்தது போலவே இப்போதும் பெரியதாக காட்சி அளிக்கிறான். சிறிய மாற்றம் அப்போது வெள்ளை நிறம் இப்போது மஞ்சள்நிறம் அவனிடமிருந்து விதவிதமான வர்ணஜால கதிர்கள் வெளிப்பட்டுகொண்டே இருக்கிறது. கற்பனை குதிரை முட்டி மோதி பறந்து போகும் அளவிற்கு எண்ணற்ற வண்ணங்களை மேற்கு வானத்தில் வாரி இறைக்கிறான் சூரிய தேவன். உழைத்து களைத்துபோன மக்களுக்கு உடம்பை பிடித்து விடுவதை போல உடம்பை வருடி கொடுப்பதை போல இதமான குளிர்ச்சியான கதிர்களை தருகிறான்.

இப்படி மூன்று பொழுதிலும் மூன்றுவிதமாக தெரிகின்ற சூரியன் எப்போதும் மாறுவதில்லை. பூமி சுழற்சியானது சூரியன் மாறியதை போல நமக்கு காட்டுகிறது. போலியான மாயை காட்சியை நமது புலன்கள் உண்மை என்று நினைத்து அனுபவித்து மகிழ்கின்றன. தூரத்தில் மலையை பார்க்கிறோம் சின்னஞ்சிறியதாக கையில் தூக்கி விளையாடும் பந்துபோல தெரிகிறது. பக்கத்தில் சென்று பார்த்தால் காடும், அருவிகளும், குன்றுகளும் பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கிறது. இது நமது பார்வை குற்றமா? மலையின் மீது குற்றமா?

மாயை வசப்பட்ட நமது புலன்கள் எந்த அளவு பொய் சொல்கிறது என்பது நமக்கு தெரியும். ரயில் பயணத்தில் மரங்கள் ஓடுவதும், கானல் நீர் கண்ணுக்கு குளிர்ச்சியாக தெரிவதும் அருமையான மாயை வித்தை தானே, நமது கண்கள் மட்டுமா மாயை விரிக்கின்ற வலையில் விழுந்து மயங்கி கிடக்கிறது. நமது மனம் என்ன அறிவு கையில் குழந்தை போலவா தாலாட்டபட்டு கிடக்கிறது. மனம் எனும் குரங்கு தான் மாயை வசமாக கிடக்கும் மிகப்பெரிய மிருகம். அந்த குரங்கு ஆடுகிற ஆட்டம் தான் உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் காட்டுகிறது.

இனிப்பு பண்டங்கள் எனக்கு பிடிப்பது கிடையாது அதை சாப்பிட்டால் திகட்டுவது போல இருக்கும் கூடியமானவரையில் இனிப்பை குறைவாக எடுத்துகொள்வேன். விருந்துக்கு பிறகு பாயாசம் பரிமாறப்பட்டால் கூட சாஸ்திரத்திற்க்காக அதை தொட்டு கொள்வேனே தவிர இன்பமாக எடுத்து கொள்ள மாட்டேன் என்று கூறுகின்ற பலர் உனக்கு சர்க்கரை நோய் வந்துவிட்டது இனி இனிப்பு பலகாரங்களை தொடக்கூடாது என்று






# கல்வியை தரும் சரஸ்வதி தாயத்து!



அவசரமான உலகம் இது. உலகம் ஓடுகிற ஓட்டத்தில் கூடவே ஓட முடியாதவன் தோல்வியடைந்து மூலையில் உட்கார்ந்து விட வேண்டியதுதான். ஒருகாலத்தில் உடம்பில் பலம் இருப்பவன் வெற்றி வீரனாக கருதப்பட்டான். இப்போது உடல் பலம் என்பது அலங்கார பொருளாகி விட்டது. ஜெயிப்பவனுக்கு மூளையின் பலம் வேண்டும் அதாவது அறிவு பலம் என்பது அத்தியாவசிய தேவையாகிவிட்டது.

தானாக அறிந்து கொள்வது அறிவு என்ற உண்மை பலருக்கும் தெரிவதில்லை. புத்தகங்களை படித்து வரக்கூடிய அறிவுதான் அறிவும், திறமையும் என்ற நிலைமை உருவாகி விட்டது. இதனாலேயே நிஜமான அறிவை போதிக்க கூடிய கல்வி நிறுவனங்கள் வியாபாரக்கூடமாகி விட்டது. கல்வி கடை சரக்காகிவிட்டது. யார் விரைவான நேரத்தில் மனப்பாடம் செய்கிறானோ அவனே சிறந்த கல்வியாளன் என்று கருதவும்படுகிறான்.

மனப்பாடம் செய்யும் கலையை கற்றுத்தருவதற்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. மூளைக்கான பயிற்சி, உடம்பிற்கான பயிற்சி என்று அந்த வழிமுறைகள் நீண்டு கொண்டேபோகிறது. அவைகளை சம்மந்தப்பட்டவர்கள் கடினமான முயற்சி செய்து பழகிக்கொள்ள வேண்டும். இப்போது அடிப்படையான சந்தேகம் வருகிறது. படிக்கும் நாள் வெகு குறைவு இதில் மனப்பாடம் செய்ய பயிற்சி எடுப்பதா? அல்லது மனப்பாடம் செய்வதா? இரண்டுக்குமே நேரம் இருப்பதில்லை. இதனால் ஒவ்வொருவரின் கல்வி நிலையும் அவனவன் கிரகக்கோளாறுகளுக்கு தக்கபடி போகிறது.

ஜாதகப்படி கோளாறு இருப்பவர்கள் சரிவர கல்வியை முடிக்க முடியாது. அதனால் அவர்கள் இந்த உலகத்தில் கல்வி கிடைக்காமல் தோற்றுப் போகவேண்டியது தானா? என்று எண்ணி யாரும் வருத்தப்படவேண்டியது இல்லை. நமது முன்னோர்கள் அதற்கும் நல்ல தீர்வு வைத்திருக்கிறார்கள் அந்த தீர்வின் அற்புதமான பெயர் சரஸ்வதி தாயத்து.

இந்த சரஸ்வதி தாயத்தை படிப்பவர்கள் அணிந்துவந்தால் நினைவாற்றல் பெருகும். தேர்வு நேரத்தில் படபடப்பு வராது. படித்ததை நிதானமாக யூகித்து எழுத முடியும். படிப்பிற்காக ஏற்படும் தடைகள், உடல் கோளாறுகள் அனைத்தையும் தீர்க்கும். காரணம் இந்த சரஸ்வதி தாயத்தை புனிதமான மூலிகைகளால் பிரபஞ்ச ஆற்றலை பயன்படுத்துபவர்களுக்கு ஈர்த்து தரும் தெய்வீக சக்தி படைத்ததாக இருக்கிறது. குழந்தைகள், பெரியவர்கள், ஆண் பெண் என்ற பேதமின்றி கல்வி கற்கும் அனைவரும் இதை பயன்படுத்தலாம். பதவி உயர்வுக்காக பரிட்சை எழுதுபவர்களுக்கு கூட இது பயன்படும். இத்தகைய அபூர்வ தாயத்து உங்களுக்காக காத்திருக்கிறது.

இதை சுலபமான முறையில் நீங்கள் பெறுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று நமது முன்னோர்களின் திறமையை நீங்கள் நேரடியாக புரிந்து கொள்ள வேண்டும். அடுத்ததாக அவர்களது அறிவாற்றலை பயன்படுத்தி நீங்கள் ஜெயிக்க வேண்டும் என்பதற்காகவே எந்தவிதமான இடைஞ்சலும் இன்றி உங்களுக்கு தரத்தயாராக இருக்கிறோம்.

சரஸ்வதி தாயத்தை நீங்கள் பெறுவதற்கு கால அவகாசம் தேவையில்லை. எப்போது வேண்டுமானாலும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சரஸ்வதி தாயத்தை நீங்கள் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?
இது சித்தர்கள் மக்கள் பயன்பாட்டிற்கு தந்த கொடை என்பதனால் அதிகப்படியான காணிக்கை கிடையாது. தயாரிக்க போதுமான ( Rs- 350/-) முன்னூற்று ஐம்பது ரூபாய் மட்டுமே நீங்கள் செலுத்தினால் போதும்.

நீங்கள் நமது ஆசிரமத்திற்கு நேரில் வந்தும் வாங்கிகொள்ளலாம் அல்லது தபாலிலும் பெற்றுகொள்ளலாம். வீட்டில் இருந்தபடிய பணம் செலுத்தி vpp மூலமும் பெறலாம் (cash and delivery).
இந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும். Cell no = 8110088819.

ADVT.

மருத்துவர் கூறியவுடன் லட்டு உருண்டைக்காக ஏங்கி தவிப்பதும், அல்வா துண்டுக்காக அலைந்து கொண்டிருப்பதும் நாம் பார்க்கின்ற விந்தையாகும்.

சாதாரணமாக உட்காந்திருந்தால் நேரம் போவதே தெரியாது. இப்போது தான் உட்காந்தது போல் தெரிகிறது அதற்குள் இரண்டு மணிநேரம் ஆகி விட்டதா? என்று தோன்றுகிறது. அதே வேளை நமது அன்புக்குரியவர் யாரவது ஒருவருக்காக காத்திருக்கிறோம் என்றால் அந்த காத்திருக்கின்ற நேரம் யுக கணக்காக தோன்றுகிறது. பத்துநிமிடம் நகர்வதற்கே பத்துமணிநேரம் ஆனது போல் ஆகிவிடுகிறது.

எனவே மாயை என்பது நமது சூழ்நிலையை மாறுதலடைவது போல செய்கிறது. நமது புலன்களை உண்மைக்கு புறம்பானதாக நம்ப வைக்கிறது. நமது மனதை தனது விருப்படி ஆட்டி வைக்கிறது. எல்லாமே பொய்யான காட்சிகளாக, நம்பமுடியாத சூழ்நிலையாக மாயை காட்டுகிறது. நாம் காணுகிற காட்சிகள் எல்லாம் மாயை காட்சிகளே! ஒரு பந்தத்தை உயரத்தில் தூக்கி பிடித்து வட்டமாக சுற்றினால் நெருப்பு வட்டம் இருப்பது போல தெரிகிறது. உண்மையில் நெருப்பு வட்டமில்லை ஆனால் அப்படியொரு மாய காட்சி உண்மை போல தோற்றம் அளிக்கிறது. ஒரு முப்பட்டை கண்ணாடியில் வெள்ளைநிற வெளிச்சத்தை செலுத்தினால் வானவில்லின் எழு வர்ணங்கள் தெரிவது போலவே பல அழகிய நிறங்கள் தெரிகிறது.

இதை போலவே தான் கடவுள் என்ற பிரம்மம் மாயை வசத்தால் உலகமாக உலகத்தின் பல வடிவமாக நமக்கு தோன்றுகிறது. நாம் கடவுளை கண்ணால் காண்பது இல்லை. மாயை என்பதையும் கண்களால் பார்ப்பது இல்லை. நாம் பார்ப்பது உலகத்தை மட்டுமே உலகத்தில் தெரிவது ஒவ்வொன்றும் வானவில்லின் நிறங்களை போல வெறும் பொய்யான தோற்றங்களே ஆகும். இதை பொய்யென்று நிஜமாகவே உணர்ந்து அதாவது பிரம்மம், பிரபஞ்சம், மாயை என்பனவற்றின் உண்மை தத்துவத்தை உணர்வதே மோட்சம் என்று நமது முன்னோர்கள் அழகாக சொன்னார்கள்.

ஆதிசங்கரரை போலவே கௌதம புத்தரும் நாம் காணுகிற காட்சிகள் எல்லாமே பொய்யென்று கூறுவார். இருவரும் கூறுகிற வார்த்தை ஒன்றாக இருக்குமே தவிர சொல்லுகிற விதம் வேறு வேறு. அதற்கான விளக்கங்களும் வேறு வேறு. காண்பது எல்லாம் காண்பவனின் அறிவில் இருப்பவையே ஆகும். உலகம் என்பது மனதில் ஓடுகின்ற பிரவாகம் ஆகும். பார்க்கின்ற நேரமெல்லாம் தர்மங்கள் என்ற மூலபொருள் மாறிக்கொண்டே இருக்கிறது. இப்படி மாறும் பொருட்களை கொண்டதே உலகம். இறுதியில் இருப்பது மஹா சூன்யம் மட்டுமே என்று புத்தர் கூறுகிறார். மாயை என்று சங்கரர் கூறுவதும் சூன்யம் என்று புத்தர் சொல்வதும் பெரிய வித்தியாசம் இல்லை.

காண்பது எல்லாமே பொய் என்பது அதாவது மாயை என்பது மதத்திற்கு மட்டும் உள்ள கொள்கை அல்ல. மதங்களே போலியானது கற்பனையானது என்று கூறுகிற விஞ்ஞானத்திற்கும் மாயாவாதம் என்பது உயிர் நாடியாக இருக்கிறது. இல்லாததை போல் இருக்கும் இல்லாததை தேடுவதில் தான் கண்டுபிடிப்புகள் இருக்கின்றன. மாயை விலக விலக தான் உண்மைகள் தெரியவரும். விஞ்ஞானத்தில் கண்டுபிடிப்புகள் என்று சொல்வதும், மெய்ஞானத்தில் உண்மைகள் என்று சொல்வதும் பெரிய வித்தியாசம் இல்லை. ஆக விஞ்ஞானப்படியும் மெய்ஞானப்படியும் மாயை வென்றாக வேண்டும். இதை வெல்ல ஏதாவது வழி இருக்கிறதா?

கண்ணன் கீதையில் சொல்கிறான் உடலெடுத்த உயிர்கள் அவர்களுக்கு உதித்த முக்குணங்களிருந்து மாயையிலிருந்து விடுப்பட்டது என்பதே கிடையாது. மண்ணுலக மனிதர்களும் விண்ணுலக தேவர்களும் மாயை வசப்பட்டவர்களே ஆவார்கள். என்று பதினெட்டாவது அத்தியாயத்தில் கூறுகிற கண்ணன் அதற்கான பதிலை ஏழாவது அத்தியாயத்திலேயே தந்துவிடுகிறான். மாயை விலக வேண்டுமென்றால் மாயை உன்னை தீண்ட கூடாது என்றால் என்னையே சரணடை என்று சரணாகதி தத்துவத்தை பேசுகிறான்.

கண்ணன் கூறுவது தான் சத்திய வாக்கு என்னால் எதுவுமில்லை, என்னால் எதுவும் முடியாது, நான் எதற்கும் ஆனவன் அல்ல, எல்லாம் வல்லவன் நீ, நீயே அனைத்தும் அறிந்தவனாக இருக்கிறாய். உன்னிடம் என்னை முழுமையாக ஒப்புவித்து விட்டேன் எனது மனம் எனது புலன் எனது உடல் எல்லாமே உனக்கு அர்ப்பணம் அதை என்னவேண்டுமோனாலும் செய், எப்படி வேண்டுமென்றாலும் ஆட்டுவித்துக் கொள் நான் சரணடைகிறேன் என்று முற்றிலும் கண்ணனின் பாதத்தை பற்றிகொண்டால் மாயை என்பதே இல்லாதது ஆகிவிடும். அனைத்தும் கண்ணனின் லீலை என்கிற போது மாயை என்பது ஏது? கண்ணனும் அவனது விளையாட்டும் மாயை என்பது போல தோன்றினாலும், மாயை என்பதும் தெய்வீகமானதாக மாறிவிடும். எனவே மாறுபட்ட காட்சி கூறுபட்ட கோலம் என்பவைகளை மறந்துவிட்டு எல்லாமே அவன் செயல் என்றால் மாயை என்பது இல்லாமல் போய்விடும். சர்வ மங்களமும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434





மின்னூல் வடிவத்தில்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...
aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.



# “ஆ(ம)ஹா பாரதம்”

பாகம் 8

ஜனமேஜயன் சர்ப்ப யாகம் செய்வதற்கான வேலைகளில் மும்முரமாக இறங்கியிருந்தான். இது ஒருபுறம்.

அதற்கு முன் சில நிகழ்வுகள்.

ப்ருகுவம்சம் பற்றியது.

ப்ருகுவின் மனைவி புலோமா, கர்ப்பம் தரித்து பிரசவ காலத்திலிருந்த சமயம் ப்ருகு நீராட சென்றிருந்தார். அந்த நேரம் பார்த்து புலோமா என்றே பெயர் கொண்டிருந்த அரக்கன் ப்ருகு மனைவியை அடையும் பொருட்டு உள்ளே வந்தான்.

சிறு வயதிலிருந்தே புலோமாவை அடைய எண்ணம் கொண்டிருந்தான் இந்த அரக்கன். புலோமாகுழந்தையாக இருந்த போது அவளது தந்தை அவள் அழும் சமயங்களில் அழுகையை நிறுத்தும் பொருட்டு ராக்ஷஸா! இதோ இவளைப் பிடித்துக்கொள் என்று சொல்வார். அந்த சமயம் மறைவிலிருந்த புலோமா எனும் இந்த அரக்கன் இவள் நமக்குத் தான் என்று அன்று முதல் அவளை தொடர்ந்து கண்காணித்து கொண்டே வந்தவன் இன்று அவளது ரூபத்தில் மயங்கி அவளை அடையும் பொருட்டு ஆசிரமத்தினுள்ளேயே வந்து விட்டான்.

வந்திருப்பவன் அதிதி என்றெண்ணிபுலோமா அவனுக்கு பழங்களை தர முன் வந்தாள். ஆனால் அவளை அபகரிக்க எண்ணி அருகே வந்த அரக்கனின் கண்களில் அக்னிஹோத்திரத்தில் அக்னி ஜொலிப்பதைக் கண்டான். அவன் அக்னியிடம் இவள் யாருடைய பத்தினி நீயே சொல்.

சிறு வயது முதலே எனக்குத் தருவதாக சொல்லிவிட்டு இன்று இந்த ப்ருகுவிற்கு தந்துவிட்டான் இவளது தந்தை. நீ உண்மையானவன் பொய் சொல்ல மாட்டாய் சொல். இவளை முன்பே வரித்திருந்தவன் நான் தானே. இன்று யாரோ ஒருவன் இவளை மணந்து கொள்வது என்பது சரியா? நீயே சொல் இவள் யாருக்கு உரியவள்?

அரக்கன் கேட்டதும் ; அக்னி அரக்கனே! இவளை நீதான் முதலில் வரித்தாய் அதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை. ஆனாலும் என் முன்னிலையில் வேத சடங்கு படி மந்திரங்களால் இவளை ப்ருகு முனிவரே கைப்பற்றியுள்ளார். முதலில் யார் வரித்தார் எனில் நீயே என்பது தான் உண்மை என்றார் அக்னி.

அடுத்தகணம் அரக்கன் வராஹரூபம் எடுத்துக் கொண்டு அவளை காற்றின் வேகத்தில் அபகரித்தான். அந்த நேரத்தில் புலோமாவின் வயிற்றிலிருந்த கர்ப்பமானது கோபத்தோடும், யோக பலத்தோடும் தாயின் வயிற்றிலிருந்து வழுவி வந்தது. இவனே ச்யவனன். சூரியனைப் போன்று தீக்கொழுந்தாய் வந்து விழுந்த கர்ப்பத்தைக் கண்டதுமே அரக்கன் தாயை விட்டு விட்டு கீழே விழுந்தான். அக்கணமே பொசுங்கியும் விட்டான்.

மூர்ச்சையாகியிருந்த புலோமா தெளிந்தப்பின் தன் குழந்தையான பார்கவச்சயர்வனனை எடுத்து கொண்டு பிரும்மாவிடம் சென்றாள். அழுதுக் கொண்டிருந்தவளை தேற்றி ஆறுதல் அளித்தார் ப்ரும்மா. அவளது கண்ணீரானது நதியாகவே பெருகிட அதற்கு வதூஸரா என்று பெயரிட்டார்.

ப்ருகு முனிவர் மகனையும், மனைவியையும் கண்டு நடந்ததை அறிய எண்ணி மனைவியிடம் கேட்க அவளும் நடந்ததை நடந்த வண்ணம் எடுத்து சொன்னதும் அதைக் கேட்ட ப்ருகு முனிவர் மிகுந்த கோபத்துடன் “அக்னியே! நீ இன்று முதல் எல்லாவற்றையும் சாப்பிட்டு விடுபவனாய்” என்று சபித்து விட்டார்.

ப்ருகுவின் சாபத்தால் கோபமுற்ற அக்னி எதற்காக சாபமிட்டீர். நான் செய்த தவறு என்ன? நான் தர்மத்திலிருப்பவன். உண்மையைப் பேசுபவன். அரக்கன் கேட்டதற்கு உண்மையைக் கூறினேன். ஒரு விஷயத்தை அறிந்தவன் அதை தெரியாது என பொய் சொன்னால் அவனது குலத்தில் உள்ள 7 தலைமுறைகளை நரகத்திற்கு அனுப்புகிறான் என்றாகும். அவனும் பாவத்தைச் சுமக்கிறான். சாபம் அளிக்கும் வல்லமை எனக்கிருந்தும் நான் ஏன் சபிக்கவில்லையெனில் நான் பிராம்மணர்களை மதிக்கிறேன், நீயும் எல்லாம் அறிந்தவன் என்றாலும் சற்றே நான் சொல்வதை கேள்.

நான் பல வித உருவங்களில் அக்னிஹோத்திரத்திலும், யாகங்களிலும், கர்ப்பதானம் போன்ற செயல்களிலும் வாசம் புரிகிறேன், என்னில் இடப்படும் ஹவிஸ் மூலம் தேவரும் பித்ருக்களும் திருப்தி அடைகின்றனர். பௌர்ணமியன்று தேவருக்கும், அமாவாசையன்று பித்ருக்களுக்கும் அளிக்கப்படுபவைகளை தேவரும் பித்ருக்களும் உண்கின்றனர். எல்லாவற்றையும் நானே தின்பவனாகி விட்டால் என்னவாகும்?

எனக் கேட்டு விட்டு அக்னி மறைந்து விட்டார்.

அக்னி இல்லாததால் மக்கள் வருந்தினர். ரிஷிகள் கவலையோடு தேவர்களிடம் சென்று அக்னி இல்லாமல் போனதால் எங்கள் செயல்கள் மறைந்து விட்டன. ஆகவே தாமதிக்காமல் இதற்கொரு வழியைத் தேடுங்கள் என்று வேண்டினர்.

பின் அனைவரும் பிரம்மாவிடம் சென்று நடந்த அனைத்தையும் எடுத்துக் கூறினர். கேட்ட பிரம்மா அக்னியை அழைத்து இனிமையாக கூறலானார்.

கதையின் நடுவே கரடியாகிறேன்.

குழந்தைகளுக்கு நன்மையை சொல்லித் தாருங்கள் என்று பலரும் தற்போது குரல் கொடுத்து வருவது எதனால்? ஒரு குழந்தை அழுதால் அடம் பிடித்தால் பேய் வருகிறது பிசாசு வருகிறது என்றும் நான் உன்னை அவர்களிடம் பிடித்து தரப் போகிறேன் என்றும் சொல்லக் கூடாது என்பதை புலோமா வரலாறு சொல்லித் தருகிறது.

இதெல்லாம் சும்மா என்று தட்டிக் கழிக்கும் அன்பர்கள் இருப்பர்.

நம் மனதிற்கு ஒரு வல்லமை உண்டு என்றும் நாம் எதை எப்பொழுதும் சொல்லிக் கொண்டே இருக்கிறோமோ அப்படியே அவை நடைபெறும் என்பதை அறிவியல் ரீதியாக நிரூபணம் செய்து காட்டுகின்றனர் என்றும் சொல்வதை கேட்டிருப்போம்.

அதனால் குழந்தைகளிடம் இப்படியெல்லாம் பேசாமலிருந்து நல்ல சொற்களைப் பேசி பழக்கப் படுத்துவோமே. அன்றாடம் அந்தந்த சமூகத்திற்கென்று தரப்பட்டிருக்கும் கடமைகளை அவரவர் சரிவர செய்து வருவது நல்ல பலனைத் தரும். ப்ருகுமுனிவர் அன்றாடம் செய்த அக்னிஹோத்திரமான செயலே அவரது மனைவியையும், மகன் ச்யவனனையும் தீமையிடமிருந்து காத்து தந்தது.

நாம் தெய்வம் என்று முதலில் வணங்குவது அக்னியை தான். நாம் வணங்கும் தெய்வம் தர்மத்திலிருந்து விலகி விடக் கூடாது என்று நாம் எதிர்பார்ப்போமே. நம் பொருட்டே அக்னி உண்மையின் உருவமாய் இருந்து; நம்மையும் அவர் வழியில் அழைத்துச் செல்கிறார்.

உண்மைக்காக சாபம் சுமந்த அக்னியை அழைத்து பிரம்மா அப்படி என்னதான் சொன்னார் என்று கேட்கிறீர்களா?

போய் படிச்சுட்டு வந்துட்றேனே.

அடுத்த இதழில்....

- Thali,

Ph:9600999279



# தேவர்களுக்கு பிரம்ம முகூர்த்தமான மார்கழி மாதத்தின் சிறப்புகள்

தமிழ் மாதங்களில் மார்கழி என்பது இறைவனுக்கு உரிய மாதமாக விளங்குகிறது. மற்ற மாதங்களில் ஒரு நாளோ, ஒரு கிழமையோ மட்டுமே இறைவனுக்கு உகந்ததாக இருக்கும். ஆனால் மார்கழியில் மட்டும் அந்த மாதம் முழுவதும் இறைவனுக்கு உகந்ததாகவே போற்றப்படுகிறது.

மார்கழி மாதத்தை தேவர் மாதம் என்று குறிப்பிடுவர். அதாவது கடவுளை வழிபடும் மாதமாகும். இறைவனை வழிபடுவதற்காக இம்மாதம் ஒதுக்கபட்டுள்ளதால் இம்மாதத்தில் எவ்வித மங்கல நிகழ்ச்சிகளும் நடத்தப்படுவதில்லை.

சைவ ஆலயங்களிலும், வைணவ ஆலயங்களிலும் சூரிய உதயத்திற்கு முன்னதாகவே பூஜை, ஆராதனை நடத்தப்படும். மேளதாள வாத்தியங்கள் முழங்கப்படும். சிவாலயங்களில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சியும், விஷ்ணு ஆலயங்களில் திருப்பாவையும் பாடப்படும்.

திருவெம்பாவை விரத காலத்தில் சைவர்கள் வீதி தோறும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடல்களைப் பாடிக்கொண்டும் ஒவ்வொரு பாடல் முடிவிலும் சங்கு ஊதிக் கொண்டும் ஆலயங்களுக்குச் செல்வர். விஷ்ணு ஆலயங்களில் மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவை பாடுவர்.

இந்த மாதத்தில் திருப்பதி திருமலையில் காலையில் சுப்ரபாதம் பாடுவதற்கு பதிலாக ஆண்டாளின் திருப்பாவை பாடுவார்கள். இம்மாதத்தில் எல்லா பெருமாள் கோயில்களிலும் சுப்ரபாதத்துக்கு பதில் திருப்பாவை பாடுவார்கள். இம்மாதம் ஆண்டாளுக்கு முக்கியத்துவம் தரப்படும் மாதமாக போற்றப்படுகிறது.

மனிதர்களுக்கு ஒரு நாள், 60 நாழிகை (ஒரு நாழிகை என்பது 24 நிமிடம்). பகல் 30 நாழிகை, இரவு 30 நாழிகை. மனிதர்களின் ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை முதல் ஆனி வரையுள்ள காலம் பகல் எனவும், ஆடி முதல் மார்கழி வரையுள்ள காலம் இரவு எனவும் ஆகும். இதன்படி தேவர்களுக்கு இரவுக் காலம் முடிகிற வைகறைப் பொழுது, மார்கழி மாதமாகின்றன. மார்கழி மாதம் தேவர்களுக்கு அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரையுள்ள இரண்டு மணி நேரத்தைக் குறிக்கும். சூரிய உதயத்துக்கு முன்பான இந்தக் காலம் பிரம்ம முகூர்த்தம் என்று அழைக்கப்படும். ஒரு நாளின் முக்கியமான பாகம் வைகறைப் பொழுது என்றால் அது மிகையாகாது.

## புராண நிகழ்வுகள்:

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மார்கழியில் தான் இறைவனை அதிகமாக வழிபடும் நிகழ்ச்சிகள் வருகின்றன. மார்கழி மாதத்தில் பல்வேறு புராண நிகழ்வுகள் நடந்துள்ளது.

- மகாபார யுத்தம் மார்கழி மாதத்தில் நடைபெற்ற தாக இதிகாசம் கூறுகிறது.
- திருப்பாற்கடல் கடையப்பட்டதும், முதலில் விஷம் எழுந்ததும், சிவன் அதனை உண்டு உலக மக்கள் அனைவரையும் காப்பாற்றியதும் மார்கழி மாதத்தில்தான்.
- இந்திரனால் பெரு மழை வெள்ளம் உருவாக்கப்பட்டு கோகுலத்தில் அனைவரும் துன்பப்பட்டபோது, கோவர்த்தனகிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்து மக்களை காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில்தான்.
- மேலும் ஆண்டாள் நாள்தோறும் வைகறையில் எழுந்து ஒவ்வொரு பாசுரமாகப் பாடி, திருமாலை திருப்பாவையால் திருவடித் தொழுது, திருமணம் புரிந்ததும் மார்கழி மாதத்தில்தான்.

இவ்வாறு பல மகத்துவத்தை தன்னுள் அடக்கி வைத்துள்ளது மார்கழி மாதம்.

தேவர்களின் அதிகாலைப்பொழுதாகவும், தேவர்களுக்கு பிரம்ம முகூர்த்த நேரமாகவும் விளங்கும் மார்கழி மாதத்தில்தான் சிதம்பரம் நடராஜர் ஐந்தொழில்களையும் புரிகின்றார். என்று புராணங்கள் கூறுகின்றன.

## தோஷங்களை தீர்க்கு மாதம்:

மார்கழி மாதத்தில் விரதமும், செல்வம் தரும் நோன்பு இருந்து விஷ்ணுவை வழிபட்டால் தோஷங்கள் நீங்கி செல்வ செழிப்பை பெறலாம். இந்த மாதத்தில் இருக்கும் நோன்பு, விரதங்களின் பலன் மிகவும் சக்தி வாய்ந் ததாக விளங்கும், திருமணத்தடை நீங்கும், குழந்தை பாக்கியம் கிடைக்கும், தொழிலில் நஷ்டம் நீங்கி லாபம் பெருகும், இதனால்தான் மார்கழி மாத நோன்பு, மிகவும் சிறந் தது என்று முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

இந்த மாதத்தில் நோன்பும் விரதமும் இருக்க முடியாத சூழ்நிலையில் இருப்பவர்கள் மார்கழி அதிகாலை 4.30 மணிக்கே எழுந்து விடவேண்டும். வீட்டை சுத்தம் செய்து, நீராடி, கோலமிட்டு, திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களைப் பாடினாலே அபரிமிதமான பலன் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

## கோலமிடும் வீட்டில் மகாலட்சுமி வாசம்:

மார்கழி மாதங்களில் வீட்டு முன்பு கோலமிட்டால் மகாலட்சுமி வீடு தேடி வருவார் என்பது நம்பிக்கை.





இதனால் பெரும்பாலானோர் மார்கழி மாதத்தில் கோல மிடுகின்றனர்.

**நோய் தீர்க்கும் மாதம்:**

மார்கழியில் காலையில் எழுந்து வெளியே நடந்தால் மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களுக்கு தீர்வுகிடைக்கும் என்று முன்னோர் கண்டுபிடித்த காரணத்தால்தான், அதிகாலை பொழுதில் பஜனைபோன்றவற்றை பாடியவாறு, தெருமுழுக்க மக்கள் கூட்டம் கூட்டமாக வலம் வந்தனர். இவ்வாறு வலம்வரும்போது ஏற்படும் ஓசோன் வாயு நுரையீரலுக்கு சென்று புத்துணர்ச்சி தரும். மார்கழி மாத காற்று சருமத்திற்கும், வெள்ளை சிகப்பு உயிர் அணுக்களுக்கும், புற்று நோய்களுக்கும், உடல் நலத்திற்கும் மிகவும் நல்லது. இதை விஞ்ஞான பூர்வமான அறிவியல் ஆராய்ச்சியும் உண்மை என்று ஆராய்ந்துள்ளது.

இம்மாதத்திலுள்ள ஒவ்வொரு நாளும் நித்ய விரத நாளாகக் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீமந் நாராயணனின் கேசவா, நாராயணா, கோவிந்தா, மாதவா, மது சூதனா, விஷ்ணு, த்ரிவிக்ரமா, வாமனா, ஸ்ரீதரா, ரிஷிகேசா, பத்மனாபா, தாமோதரா என்ற பன்னிரெண்டு நாமங்களும் பன்னிரெண்டு மாதங்களாக கருதப்படுகின்றன. இதில் முதல் நாமமாக விளங்கும் கேசவா என்பது மாதங்களுக்கு மணிமகுடமான மார்கழியாக விளங்குகிறது. ஆன்மிக மார்க்கத்திற்குச் செல்ல தலையான மாதமாகக் கருதப்படும் இம் மார்கழி மாதம் ''மார்க சீர்ஷம்'' என்பர். அதுவே நாளடைவில் மருவி மார்கழி என்றானது என்றும் கூறப்படுகிறது.

**சொர்கத்தில் இடம் தரும் பெருமாள்:**

மார்கழி மாதத்தில் வரு ஏகாதசி அன்று பட்டினி இருந்து, ஹரியின் நாமத்தை ஜெபித்து, நாராயணீயம், ஸ்ரீமத் பாகவதம், ஏகாதசி மகிமை, புருஷசூக்தம் போன்றவற்றைப் பாராயணம் செய்தால் அளவற்ற பயன்பெறலாம். ஏகாதசி நாள், அதற்கு முதல் நாள், மறுநாள் ஆகிய மூன்று நாட்களும் விரதமிருந்து, கண்விழித்து பெருமாளை வழிபட்டு துவாதசி பாரணை செய்ய வேண்டும். துவாதசியன்று நெல்லிக்காய், சுண்டைக்காய், அகத்திக் கீரையை உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது. மாதத்திற்கு இருமுறை வரும் எல்லா ஏகாதசிகளிலும்கூட விரதம் இருக்கலாம்.

முடியாவிடில் மார்கழி வைகுண்ட ஏகாதசி விரதம் கடைப்பிடித்தால் மகாவிஷ்ணு மகிழ்வுடன் சொர்க்கத்தில் இடம் தருவார். இவ்விரதம் இருப்பதால் சகல பாக்கியங்களும் கிடைக்கும். கல்வி, பதவி, புத்திர பாக்கியம் கிட்டும். நம் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். பாவம் விலகும். மறுமையில் சொர்க்கம் கிட்டும். எட்டு வயது முதல் 80 வயது வரை இவ்விரதத்தை ஆண் பெண் இருபாலரும் கடைப்பிடிக்கலாம். வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்தால் மூன்று கோடி ஏகாதசி விரதங்களைக் கடைப்பிடித்த பலன் கிடைக்கும். அதனால் முக்கோடி ஏகாதசி என்றும்; மோட்ச ஏகாதசி என்றும்; பீம ஏகாதசி என்றும் இதற்குப் பெயருண்டு. பாற்கடல் நஞ்சினை ஈசன் விழுங்கியதால் நஞ்சுண்ட ஏகாதசி என்றும் கூறுவர்.

**மார்கழி பாராயணம்:**

மார்கழியில், தினமும் பாடும் பக்திப் பாடல்களுடன் திருப்பாவை, திருவெம்பாவை, தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிய திருப்பள்ளி எழுச்சி, மாணிக்கவாசகர் அருளிய திருப்பள்ளி எழுச்சி ஆகிய நான்கு நூற்பாடல்களை வீடுகளிலும், கோயில்களிலும் பாராயணம் செய்கின்றனர். குறிப்பாக மார்கழியில், சிறப்பாக பாராயணம் செய்ய வேண்டும் என்ற பெருமை இந்த நான்கு நூல்களுக்கே உண்டு. வைணவக் கோயில்கள் சிலவற்றில் மார்கழியில் ராப்பத்து, பகல் பத்து என்ற முறையில் நாலாயிர திவ்ய பிரபந்தம் முழுவதையும் பாராயணம் செய்கின்றனர்

சிதம்பரத்தில் மார்கழி மாதத்தில் நடைபெறும் ஆருத்ரா தரிசனமும், ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசியும் மிக முக்கியமான விஷேசங்களுள் ஒன்றாக போற்றப்படுகிறது.

தெய்வீக மாதமான இந்த மாதத்தில் நாமும் இறை சிந்தனையுடன் ஆன்மிக பாதையில் சென்று ஆன்மிகமலராகத் திகழ்வோம்.

– நாகராஜன்,
போன்: 0882 584 4033